RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710


மலர்:- 29, 03 பெப்ரவரி 2023 இதழ்:- 41

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

**போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!**

## 13வது திருத்தத்தை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும்! ஜெனிவா ஐ.நா. அமர்வில் இந்தியா வேண்டுகோள்!



இலங்கை 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது. ஐநா அமர்வில் இந்தியா இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது. இந்திய வம்சாவளி தமிழர் உட்பட அனைத்து மக்களினதும் மனித உரிமைகளையும் உறுதி செய்யுமாறும் இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.(3ம் பக்கம் பார்க்க)

## 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாகக் கூறி தென்னிலங்கை

### இனவாதிகளை தூண்டி விடுகின்றார் ரணில்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாகாண சபைகளின் இயக்க த்தை முழுமையாக முடக்கி விட்டு, அவற்றுக்கு அதிகாரங்களை வழங்கப் போவதாக கூறி அரசியல் (8ம் பக்கம் பார்க்க)

## சந்தி சந்தியாக நின்று காட்டிக் கொடுத்தவர்கள் நாங்கள் இல்லை! ரெலோ, புளொட் குழுக்களை கிழித்துத் தொங்க விடும் சுமந்திரன்!

இருபது வருடமாக கூட இருந்தவர்களை நல்வழிப்படுத்த எடுத்த முயற்சியில் நாம் தோல்வி அடைந்து விட்டோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார். சாவகச் சேரியில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.(6ம் பக்கம் பார்க்க)

## 13க்குள் தீர்வு வருமா?

இலங்கையின் 75ஆவது சுதந்திர தின த்தை விமர்சையாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் முன்னெடு த்து வரும் நிலையில், தமிழ்த் தரப்பினர் இதனை கரி நாளாக அறிவித்திருக்கின்றார்கள். (18ம் பக்கம் பார்க்க)

## இந்தியா திணித்த 13ஆவது திருத்தம் வேண்டாம்! பௌத்த பிக்குகளும் இனவாதிகளும் போர்க்கொடி

வர்ண.ராமேஸ்வரன்
ஈழநாடு 30வது ஆண்டு விழா
இசைச் சங்கமம் 2023
ராஜேஸ் வைத்தியா
APRIL 23, 2023
6:00PM
அனுமதிச் சீட்டினை முற்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு 416 8419600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

THINKING OF

# SELLING OR BUYING A HOME?



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



20 Years Real Estate Experience


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

## Kennedy / Eglinton




**Scarborough** **$499,000**
Bedrooms: 3 Washrooms: 2
Very Close To Kennedy Subway

## Mccowan & Finch




**Scarborough** **$949,999**
Bedrooms: 3+1 Washrooms: 3
Located Prestigious Neighbotrhood

## Mount Albert / York Durham



**East Gwillimbury** **$985,000**
Bedrooms: 3+2 Washrooms: 4
Open Concept, Huge Backyard

## Simco St N/ Darcy



**Oshawa** **$998,000**
Bedrooms: 3+1 Washrooms: 4
Updated Open Concept Kitchen

## Mississauga /Sandalwood



**Brampton** **$677,000**
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Kitchen

## Line 6 & 10th Sdrd



**Bradford** **$999,900**
Bedrooms: 5+1 Washrooms: 4
Corner Lot, Main Floor With Office

## Markham/Denison




**Markham** **$1,850,000**
Bedrooms: 4+2 Washrooms: 4
Lots Of Upgrades, Hardwood Flr

## Meadowvale / 401



**Scarborough** **$1,899,999**
Bedrooms: 4+3 Washrooms: 5
Stunning Top To Bottom Renovations

## Eglinton & Mccowan




**Scarborough** **$580,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
Location Location Location!!!

## Birchmount & Enterprise




**Markham** **$699,900**
Bedrooms: 1+1 Washrooms: 1
Modern Open Concept Kitchen

## Simcoe & Ritson



**Oshawa** **$850,000**
Bedrooms: 3+3 Washrooms: 2
Perfect For Investors & New Owners

## Danforth Ave




**Toronto** **$$$,$$$**
Food Restaurant on A Busy Prime
Location Fronting on Danforth Ave

## Mclaughlin Rd. & Wanless Dr.




**Brampton** **$3,500**
Bedrooms: 4 Washrooms: 4
Freehold Townhouse

## Warden & St. Clair




**Toronto** **$3,200**
Bedrooms: 3 Washrooms: 3
Three Year old New Townhouse

## Bathurst / Forth York




**Toronto** **$2,375**
Bedrooms: 1 Washrooms: 1
Condo In The Waterfront Area

## Eglington & Victoria Park




**Scarborough** **$1,500**
Bedrooms: 2 Washrooms: 1
Basement for Rent

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# 13வது திருத்தத்தை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும்! ஜெனிவா ஐ.நா. அமர்வில் இந்தியா வேண்டுகோள்!

இலங்கை 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது. ஐநா அமர்வில் இந்தியா இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இந்திய வம்சாவளி தமிழர் உட்பட அனைத்து மக்களினதும் மனித உரிமைகளையும் உறுதி செய்யுமாறும் இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பாக ஜெனிவாவில் 01 பெப்ரவரி 2023 இடம் பெற்று வரும் 42வது அமர்வில் உலகளாவிய காலமுறை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழு பரிசீலனை செய்ய ஆரம்பித்துள்ளது

2006ஆம் ஆண்டு ஐ.நா.சபையின் பொதுச் சபையால் நிறுவப்பட்ட உலகளாவிய காலமுறை தொடர்பான மதிப்பாய்வு குழுவினால் ஒவ்வொரு உறுப்பு நாடும் நான்கரை ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது.

2008 ல் முதல் தடவையாகவும் 2012ல் இரண்டாவது தடவையாகவும் 2017ல் மூன்றாவது தடவையாகவும் இலங்கை உட்பட அனைத்து உறுப்பு நாடுகளின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பாக மதிப்பாய்வு செய்யப்பட்டன.

இந்நிலையில் நான்காவது சுழற்சியின் கீழ் 2022 டிசம்பர் 22 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் 2017 நவம்பரில் உலகளாவிய காலமுறை தொடர்பான குழுவால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவுள்ளது.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினரின் விரிவான ஆலோசனைகளின் பின்னர் வெளிவிவகார அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் தேசிய அறிக்கை தயாரிக்கும் செயல்முறை மேற்கொள்ளப்பட்டது

இருப்பினும் இதே கால கட்டத்தில் 75வது சுதந்திரக் கொண்டாட்டங்கள் நடைபெறுவதால் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மீளாய்வுக்கான அறிக்கையை முன்னரே பதிவு செய்யப்பட்ட



வீடியோ அறிக்கை மூலம் சமர்பிக்கவுள்ளார்.

இதில் மனித உரிமை மேம்படுத்த அரசாங்கம் சுயமாக முன்வந்து ஏற்றுக் கொண்ட விடயங்கள் மற்றும் மனித உரிமைகள் பேரவையினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் அமுல்படுத்திய விதம் குறித்தும் தெளிவுபடுத்தவுள்ளார்

# அமெரிக்க முக்கிய பிரதிநிதியை சந்தித்த தமிழ்ப் பிரதிநிதிகள்!



அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் விக்டோரியா நூலண்ட், எம்.ஏ சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்தான் உட்பட பல கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பின் போது நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வுக்கான நம்பிக்கைகள் குறித்து விவாதித்ததாக விக்டோரியா நூலண்ட் தெரிவித்துள்ளார்.

வெவ்வேறு கண்ணோட்டங்களைக் கொண்டவர்கள் தீர்வுகளை நோக்கி ஒன்றிணைந்து செயல்படும் போது, ஜனநாயகம் வலுப்பெறும் என்றும் கூறியுள்ளார்.

மேலும் இந்த சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், ரவுவ் ஹக்கீம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரிஷாட் பதியுதீன் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

இதேவேளை 01 பெப் 2023 புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்த போது சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையைப் காண அமெரிக்கா விரும்புவதாக விக்டோரியா நூலாண்ட் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வசதியைப் பெறுவதற்கு சீனா வழங்கும் கடன் உத்தரவாதம் போதாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்காக ஐஆகு தரநிலைகளுக்கு பொறுத்தமான நம்பகமான மற்றும் குறிப்பிட்ட உத்தரவாதத்தை பெற வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டுகிறார். சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வசதியை இலங்கை மிக விரைவில் பெறும் என எதிர்பார்ப்பதாக உதவி இராஜாங்கச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இது இவ்றிருக்க சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான உதவிகள் அனைத்து நாடுகளின் ஒத்துழைப்புடன் துரிதப்படுத்தப்பட வாய்ப்புள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் உறுதியளித்துள்ளார். நிதி ஸ்திரத் தன்மையை பேணுவதற்கு அரசாங்கம் மக்கள் விரும்பத்தகாத சீர்திருத்தங்களை மேற்கொண்டாலும் ஒரு நாடாக ஒன்றிணைந்து செயல்படுவதற்கு பாராட்டும் தெரிவித்துள்ளார்.

இதனால், சர்வதேச கடன் வழங்குநரிடமிருந்து சாதகமான முடிவுகளையும் நிலையான பொருளாதாரத்தை விரைவில் அடைய முடியும் என்றும் அதற்கு அமெரிக்கா முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் அமெரிக்க தூதுவர் ஜஜீலி சுங் குறிப்பிட்டுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் வெளிநாடுகளின் நம்பகத் தன்மையை மேலும் உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவை சந்தித்த போதே அமெரிக்க தூதுவர் ஜீலி சுங் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

# வீடு திரும்பினார் சம்பந்தர்



திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இரா.சம்பந்தன் வீடு திரும்பியுள்ளதாக, நாடளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் உறுதிப் படுத்தியுள்ளார். வழமையான பரிசோதனைக்காகவே இரா.சம்பந்தன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் அவரது உடல் நிலையில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமானச் சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி அறிவித்துள்ள போதிலும் அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்படவில்லை!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ள போதிலும் இது தொடர்பில் அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்படவில்லை. 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமா இல்லையா என்பதை நீதிமன்றமே தீர்மானிக்கும் என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு 31 ஜன 2023 நடைபெற்ற போது 13ஆவது திருத்தம் தொடர்பில் கேட்கப்பட்ட போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் அமைச்சரவையில் எவ்வித கலந்துரையாடல்களும் இடம் பெறவில்லை. எனினும் எந்தவொரு விடயம் தொடர்பிலும் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமா இல்லையா என்பது தொடர்பில் நீதிமன்றமே தீர்மானிக்கும். ஆனால் நீதிமன்றம் இதுவரையில் அவ்வாறானதொரு அறிவிப்பை வெளியிடவில்லை.

அரசியலமைப்பு திருத்தத்துடன் தொடர்புடைய விடயங்கள் நாட்டிலுள்ள பொதுமக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்கள் அறியாமல் முன்னெடுக்கப்படுவதில்லை. இவை தொடர்பான இறுதி தீர்மானம் அமைச்சரவையிலேயே முன்னெடுக்கப்படும். எனினும் அவ்வாறான எந்தவொரு அறிவித்தலும் அமைச்சரவைக்கு விடுக்கப்படவில்லை என்றார். 13ஆவது அரசியல் திருத்தத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும். நான் அதனை நடைமுறைப்படுத்தாமல் இருக்க வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் 22ஆவது திருத்தத்தினை எவரேனும் சமர்ப்பித்து 13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்ய வேண்டும். 13ஆல் நாடு பிளவுபடாது. விசேடமாக 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் ஐந்து நீதிபதிகள் அடங்கிய குழுவின் தீர்மானத்துக்கமைய நாம் ஒற்றையாட்சியில் இருக்கிறோம். அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு நான் உடன்படுகின்றேன்.' என்று கடந்த வாரம் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இதேவேளை நாட்டுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் மாகாணசபைத் தேர்தல்கள் விரைவாக நடாத்தப்பட வேண்டியது அவசியம் என்ற எமது நிலைப்பாடு குறித்து ஜனாதிபதியிடம் பகிர்ந்து கொண்டதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஈஸ்டர் தாக்குதல்:- பகிரங்கமாக மன்னிப்புக் கோரிய மைத்திரி




முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார். 31 ஜனவரி 2023 கொழும்பில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களிடம் அவர் பகிரங்க மன்னிப்பு கோரினார்.

தனது ஆட்சிக்காலத்தில் இவ்வாறானதொரு துயரச் சம்பவம் இடம் பெற்றமைக்காக அவர் மன்னிப்புக் கோரினார். 'நான் குற்றம் செய்ததாக தீர்ப்பில் கூறப்படவில்லை, ஆனால் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் செய்யும் குற்றங்களுக்கு ஜனாதிபதியும் பொறுப்புக் கூற வேண்டும். அதுதான் இந்த வழக்கிற்கும் எனக்கும் உள்ள தொடர்பு' என்று அவர் விளக்கமளித்தார்.

இதேவேளை சாட்சிக் கூண்டிலிருந்து வெளியே நின்றிருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சாட்சிக்கு கூண்டிற்குள் செல்லுமாறு கொழும்பு கோட்டை நீதிமன்ற நீதவான் திலின கமகே எச்சரித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் போதே நீதவான் முன்னாள் ஜனாதிபதிக்கு கடும் எச்சரிக்கையை விடுத்தார். இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவேளை முன்னாள் ஜனாதிபதி சாட்சிக் கூண்டிற்குள் செல்லாமல் வெளியில் நின்றிருந்தார். அதனை தொடர்ந்தே நீதவான் இந்த எச்சரிக்கையை வெளியிட்டார்.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்


கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

| ஆலயம் திறந்திருக்கும் நேரம் | பூசை நேரம்: |
|---|---|
| காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை | பகல் 12:00 முதல் மாலை 7:30 |
| மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை | உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம் |



அம்பாள் அடியார்களே!

04 பெப்ரவரி 2023 சனிக்கிழமை:- தைப்பூஷம்.

விஷேட அபிஷேகமும் பூஜையும் காலை 10.00 மணிக்கு நடைபெறும்

உபயம்: பாலசிங்கம் உதயகுமார் குடும்பம் ஜெயந்தன் மயூரா குடும்பம்

தைப்பூஷ தினத்தன்று பால் குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

17. பெப்ரவரி 2023 வெள்ளிக்கிழமை:- பிரதோஷ விரதம்.

18 பெப்ரவரி 2023 சனிக்கிழமை மகா சிவராத்திரி விரதம்.

முதல் ஜாமம்.- இரவு 6 மணிக்கு பூஜை உபயம்: லிங்கராஜா மீரா குடும்பம்

இரண்டாவது ஜாமம்.- இரவு 9 மணிக்கு பூஜை உபயம்: அருள் சுபா குடும்பம்

மூன்றாவது ஜாமம். நள்ளிரவு. 12 மணிக்கு பூஜை உபயம்: கிருபா. மதுரா குடும்பம்

நான்காவது ஜாமம். அதிகாலை 3 மணிக்கு பூஜை உபயம்: இளையபெருமாள் குடும்பம்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# சுமந்திரன் தனது நிகழ்ச்சி நிரலை முழுமையாக நிறைவு செய்து விட்டார் - தவராஜா கொதிப்பு!

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் வந்து தன்னுடைய நிகழ்ச்சி நிரலை முழுமையாக நிறைவேற்றி விட்டார் என இலங்கை தமிழரசு கட்சியின் கொழும்பு கிளை தலைவரும் சட்டத்தரணியுமான கேவி தவராஜா தெரிவித்தார் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.



சுமந்திரன் வீட்டுக்குள் வந்து தன்னுடைய நிகழ்ச்சி நிரலை முழுமையாக நிறைவேற்றி விட்டார் தற்பொழுது ரெலோ புளொட் ஆகிய இரண்டு கட்சிகளும் வேறு மூன்று கட்சிகளுடன் இணைந்து தனியான ஒரு கூட்டணியினை அமைத்துள்ளார்கள் இலங்கை தமிழரசு கட்சி தனியாக தேர்தலில் போட்டியிட உள்ளது இந்த கூட்டு எல்லாம் ஒரு தேர்தலை மையப்படுத்தியே முன்னெடுக்கப்படுகின்றது

ஆனால் தமிழ் தரப்பில் உள்ள அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்தால் மாத்திரமே தீர்வு தொடர்பில் நாங்கள் சிந்திக்க முடியும் ஆனால் இவ்வாறான நிலையில் தீர்வு பற்றி சிந்திக்க முடியாது அத்தோடு செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் பெயரை குறிப்பிட்டு அதாவது சுமந்திரனின் பெயரை குறிப்பிட்டு வீட்டுக்குள் ஆமை வந்து விட்டது வீட்டுக்குள் சுமந்திரன் வந்து விட்டார் அதனால் தான் கூட்டமைப்பு இவ்வாறு இருக்கின்றது என பெயரை கூறி குறிப்பிடுகின்றார்

ஆனால் சுமந்திரன் அவர்கள் பெயரைக் குறிப்பிடாது தூள் விற்பவர்கள் காட்டி கொடுத்தவர்கள் தலையாட்டியவர்கள் என கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாது அவர் துணிவிருந்தால் பெயரைக் குறிப்பிட்டு கூறியிருக்க வேண்டும் ஒருவரைப் பற்றி கூறும் போது அவருடைய பெயரை விழித்து கூறினால் தான் அது அவரை சென்றடையும். ஆனால் சுமந்திரன் யாரையோ கூறுவது போல் கூறி இருக்கின்றார் ஏன் அவ்வாறு கூறினார் என எனக்கு தெரியவில்லை

தற்பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தன் இல்லை தேர்தலின் பின்னர் மீண்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒன்று படும் என்று நினைப்பது சாத்தியமில்லாத விடயமாக காணப்படுகின்றது தேர்தலில் தனித்தனியாக கேட்கும் போதே இவ்வாறு மோதிக் கொள்ளும் அணியினர் தேர்தல் முடிய மீண்டும் வந்து ஒன்று சேர்வார்களா என்ற அச்சம் காணப்படுகின்றது

எனினும் தமிழ் தேசியத்தை சிதைப்பதற்கு நாங்கள் அனுமதிக்க முடியாது தமிழ் தேசியத்தை சிதைக்க விடாது எதிர்கால சந்ததியினரிடம் கையளிக்க வேண்டும் அதாவது இளைஞர் யுவாதிகளிடம் கையளிக்க வேண்டும் அதுவரையாவது தேசியத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது எம் அனைவரது கடமையாகும் என்றார்

# 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த மகாசங்கம் இடமளிக்காது - தம்மரத்ன தேரர்



13ஆவது அரசமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த மகா சங்கம் ஒருபோதும் இடமளிக்காது என களனிப் பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளரும் பேராசிரியருமான பூஜ்ய இந்துரகரே தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார். நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நடைபெற்ற சமய நிகழ்வொன்றில் பங்கேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோர் பங்கேற்றனர். அங்கு தொடர்ந்து உரையாற்றிய இந்துராகரே தம்ம ரத்ன தேரர், 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப் பட்டால் அதற்கு எதிராக நாளையே பிக்குகள் கிளர்ந்து எழ தயாராக உள்ளனர். எனவே, 13 ஆவது அரசமைப்பு சட்டத்தைப் பற்றி விவாதித்தால், அதனையும் வைத்து அரசியல் புரிகின்றோம் என்று எம்மை அழைத்தாலும் பரவாயில்லை. புத்தரின் போதனைகளைப் பாதுகாத்து சம்புத்த பாடசாலையைக் கொண்ட ஒரே நாடு சிறிலங்கா. ஆகவே, அதனை இரண்டு அல்லது மூன்று துண்டுகளாக உடைத்தால் எமது நாடு தாங்காது என தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

# ரத்னதேரரின் கருத்தைக் கேட்டால் அழிவீர்கள்! ரணிலை எச்சரித்தார் குமாரவெல்கம

அத்துரலிய ரத்ன தேரரின் கருத்துக்களை கேட்டால் நீங்களும் அழிந்து போவீர்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம எச்சரித்துள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



இது தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான அந்த ஊடகத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஜனாதிபதி செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அனைத்து கட்சிக் கூட்டத்தில் நவ லங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்த கருத்து காரணமாக பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரருக்கும் இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி அவர்களே, இந்த வணக்கத்துக்குரிய ரத்ன தேரர் தெரிவிக்கும் கருத்துக்களை ஏற்கவோ, கேட்கவோ வேண்டாம். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விவசாயத்தை அழிக்குமாறு வணக்கத்துக்குரிய ரத்ன தேரர் மற்றும் பாதெனிய ஆகியோரால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. எமது நாட்டில் விவசாயமும் அழிந்தது. அரசாங்கமும் அழிக்கப் பட்டது. எனவே இந்த துறவி தெரிவிக்கும் கருத்தை அதிகம் கவனிக்க வேண்டாம் என்று குமார வெல்கம தெரிவித்தார். இந்த கருத்தினை கேட்ட ரத்ன தேரரும் சற்று கோபத்துடன் உரையாற்றினார். அந்த குழுக்களில் நான் இருந்தது கூட இல்லை. நான் அறிவுரையும் தெரிவிக்கவில்லை. எது எப்படி இருப்பினும் நான் இரசாயன உரங்களுக்கு எதிரானவன். கோட்டாபய ராஜபக்ஷவின் செயற்பாடு தவறானது. அவரது செயற்பாட்டுக்கு நான் அன்றும் இன்றும் எதிராகவே உள்ளேன் என்று தெரிவித்தார். இறுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவர்களுக்கு இடையேயான மோதலை நிறுத்தினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுதந்திர தின எதிர்ப்பு!

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

மறுபுறும், அதனை எதிர்ப்பதற்கான ஏற்பாடுகள் தமிழ் சூழலில் இடம்பெறுகின்றன. இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழர்கள் விரும்பிக் கொண்டாடும் சூழல் இல்லை.

இலங்கை சுதந்திமடைந்ததாகச் சொல்லப்படும் காலத்திலிருந்து இதுதான் நிலைமை.

ஒவ்வொரு சுதந்திர தினத்தின்போதும், தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் சுதந்திர தினத்திற்கு எதிராக, அடையாள எதிர்ப்பு நடவடிக்கைகளை செய்வது வருகின்றனர்.

ரணில்–மைத்திரி ஆட்சிக் காலத்தில் அப்போதிருந்த சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுதந்திர தினங்களில் பங்குகொண்டிருந்தது.

சம்பந்தனும் சுமந்திரனும் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் சுதந்திர தின கொண்டாட்டங்களில் பங்கு கொண்டிருந்தனர். ஆனால் இன்றோ, ரணில் தலைமையிலான சுதந்திர தினத்தை எதிர்த்து போராட்டங்களை நடத்தவுள்ளதாக தமிழரசுக் கட்சி அறிவித்திருக்கின்றது.

அன்றைய ரணில் தலைமையிலான சுதந்திர தினத்தை ஆதரித்த தமிழரசு கட்சி, இன்றைய ரணிலின் சுதந்திர தினத்தை எதிர்க்கப் போவதாக கூறுகின்றது.

2015இல் ஆட்சி மாற்றத்திற்கான முயற்சிகள் தீவிரமாக இருந்த போது, கூட்டமைப்பின் சார்பில் சம்பந்தனும் சுமந்திரனுமே விடயங்களைக் கையாண்டிருந்தனர். ரணில் சந்திரிகா ஆகியோர் மீது அதீத நம்பிக்கையை சம்பந்தன் வெளிப்படுத்தியிருந்தார்.

ஒரு கட்டத்தில், இப்போதும் கூட, எங்களை நம்புகின்றீர்களா மிஸ்டர் சம்பந்தனென்று சந்திரிகா குமாரதுங்கவே, கேட்குமளவிற்கு, சம்பந்தனும் சுமந்திரனும் சிங்கள ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தனர்.

பின்னர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக, மைத்திரிபால சிறிசேன செயற்பட்ட போது, ரணில் விக்கிரமசிங்கவின் பக்கமாகவே சம்பந்தனும் சுமந்திரனும் நின்றனர். இந்தக் காலத்தில் சுதந்திர தினத்தை எதிர்த்து ஒரு நிகழ்வைக்கூட தமிழரசுக் கட்சியினர் முன்னெடுக்கவில்லை.

ஆனால் இப்போது அதனை எதிர்க்கப் போவதாக கூறுகின்றனர். சுதந்திர தினத்தை எதிர்பதாயின் அது கொள்கைசார்ந்த நிலைப்பாடாக இருக்க வேண்டும்.

சிங்கள ஆளும் தரப்போடு தேனிலவில் இருக்கும் போது, அதனை ஆதரிப்பதும், பின்னர் ஆளும் தரப்போடு முரண்பட்டுக் கொண்டதும் சுதந்திர தினத்தை எதிப்பதாகவும் இருக்கக் கூடாது.

ஏனெனில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னையை தீர்ப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் எவையுமே இதுவரையில் வெற்றியளிக்கவில்லை. அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதைக் கூட தென்னிலங்கை சிங்கள கட்சிகள் எதிர்த்து வருகின்றன.

இந்த பின்புலத்தில் நோக்கினால் இலங்கையின் சுதந்திர தினமானது, பெரும்பான்மை சிங்களவர்களுக்கானதொரு விடயமாகவே இருக்கின்றது. தமிழ் மக்கள் தங்களை இலங்கையர்களாக இதுவரையில் கருதவில்லை.

தமிழ் மக்கள், அவ்வாறு உணரக் கூடியதொரு அரசியல் சூழலும் இதுவரையில் உருவாகவில்லை. இதுவரையில் இலங்கைத் தீவை மாறி, மாறி ஆட்சி செய்த சிங்கள ஆட்சியாளர்கள், தமிழ் மக்களை சம பிரஜைகளாக உள்வாங்கக் கூடியவாறான அரசியல் ஏற்பாடுகளை மேற்கொள்ளவில்லை.

தமிழ் மக்களின் சமத்துவத்திற்கான கோரிக்கைகள் அனைத்தையுமே எதிர்த்தே வந்திருக்கின்றனர்.

இந்த நிலையில் சுதந்திர தின எதிர்ப்பை எவருமே தவறென்று கூறமுடியாது, ஆனால், அந்த எதிர்ப்பை தங்களின் தேர்தல் அரசியல் நோக்கில் கட்சிகள் கையாளக்கூடாது.

தமிழ் தேசிய கட்சிகள் ஆகக் குறைந்தளவிலாவது மக்களுக்கு பொறுப்புள்ளவர்களாக இருக்க நடந்து கொள்ள வேண்டும்.

ஒரு முறை சுதந்திர தினத்தை கொண்டாடுங்களென்று கூறுவதும், பின்னர் எதிர்க்குமாறு கூறுவதற்கு மக்கள் ஆட்டு மந்தைகளல்ல.

# சந்தி சந்தியாக நின்று காட்டிக் கொடுத்தவர்கள் நாங்கள் இல்லை! ரெலோ, புளொட்குழுக்களை கிழித்துத் தொங்க விடும் சுமந்திரன்!




இருபது வருடமாக கூட இருந்தவர்களை நல்வழிப்படுத்த எடுத்த முயற்சியில் நாம் தோல்வி அடைந்து விட்டோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். சாவகச்சேரியில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

2001ஆம் ஆண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது அதற்கு போட்டியாக அரசுக்கு ஆதரவாக இன்னொரு கட்சி உருவாக்கப்பட்டது. அது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக பதிவும் செய்யப்பட்டது. அரசு கூலியாக இருந்தவர்கள் தான் அந்த கட்சியை பதிவு செய்தவர்கள். தங்களிடத்தில் எது இல்லையோ அதை தங்களுடைய பெயரிலேயே சேர்த்துக் கொண்டார்கள். ஜனநாயகமாக அவர்கள் செய்யப்படவில்லை, அந்த நேரத்திலேயே வீதி வீதியாக சந்தி சந்தியாக நின்று காட்டி கொடுத்துக் கொண்டிருந்தவர்கள். அரசு கூலிப்படையாக செயல்பட்டவர்கள் பதிவு செய்த அரசியல் கட்சிக்கு பேர் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி. அவ்வாறானனவர்கள் இன்றைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை தாங்கள் பாதுகாக்கின்றோம் என்று நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு போட்டியாக அரசு கைக்கூலியாக கட்சியை வைத்திருக்கின்ற அவர்கள் இன்றைக்கு அந்த கட்சியிலே போட்டியிட்டுக் கொண்டு அதற்குப் பெயர் கூட்டமைப்பு என்று சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள்.

ஜனநாயகம் என்பது மறைந்து விட்டது என்பதை இப்போது ஏற்றுக் கொண்டவர்களாக அதை இல்லாத ஆக்கி விட்டு சிறிய ட ஒன்றை முன்னுக்கு வைத்துக் கொண்டு குறுகிப் போன ஜனநாயகத்தை வைத்துக் கொண்டு கட்சி நடத்துவதாக இன்றைக்கு தம்பட்டம் அடிக்கின்றார்கள். மக்களுக்கு இந்த தேர்தலிலே யார் எவர் என்பது நன்றாக தெரிந்திருக்கும். 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மன்னார் மாவட்டத்திலே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சூசைதாசன் போட்டியிட்டு இருந்தார். சூசைதாசன் என்பவர் 77 ஆம் ஆண்டு போட்டியிட்டு பெரு வெற்றியீட்டியவர்.

அப்படிப்பட்ட ஒருவர் 2010ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் தோல்வி அடைந்திருந்தார்.அந்த தோல்விக்கான காரணத்தை 2012ஆம் ஆண்டு இலங்கை தமிழரசு கட்சியின் தேசிய மாநாடு மட்டக்களப்பில் நடைபெற்ற போது அவரே சொல்லியிருந்தார்.

அவர் பேசுகின்ற போது சொன்னார் நான் தோற்றமைக்கு காரணம் கேட்கின்றார்கள். நான் தோற்றதற்கு காரணம் நான் தூள் கடத்துவதில்லை, நான் ஆள் கடத்துவதில்லை, நான் கொலை செய்வதில்லை அதனால் தான் நான் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றேன் என்று சொன்னார்.

ஆனால் இன்றைக்கு தமிழரசு கட்சி மக்கள் முன்பாக ஒரு தூய்மையானதாக வந்து நிற்கின்றது. தூள் கடத்துபவர்கள் எங்கள் மத்தியில் இல்லை நீங்கள் தாராளமாக தமிழரசு கட்சிக்கு வாக்களிக்கலாம்.

இந்த தேர்தலில் எங்களுடைய கட்சி போட்டியாளர்களுக்கு நான் சொல்லுகின்ற விண்ணப்பம் எந்தவித போதை வஸ்துக்களையும் மக்களுக்கு விநியோகிக்க வேண்டாம், சாராயம் விநியோகிக்க வேண்டாம் அப்படி செய்கின்ற பலர் இருக்கின்றார்கள் அவர்கள் எல்லாம் இப்போது எங்களுடைய கட்சி இல்லை.

இப்போது வேட்பாளர்களாக இருக்கின்றவர்கள் மக்களுக்கு சாராயம் விநியோகிக்க வேண்டாம் தூய்மையான சாத்வீக வழியிலான ஒரு போராட்டத்தை தமிழரசுக் கட்சி முன்னெடுக்கினறது. நெடுங்காலமாக இலங்கை தமிழரசு கட்சி சொல்லி வந்த கொள்கையை முன் வைத்து உங்களுடைய பிரதேசத்து மக்களுக்காக நீங்கள் போட்டியிடுங்கள் என்று அனைத்து வேட்பாளர்களிடமும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

சம்பந்தரையும் என்னையும் குறை சொல்லுவது பலருக்கு கைவந்த கலையாக இருக்கின்றது அதைத்தான் இவர்களும் இப்போது கையில் எடுத்திருக்கின்றார்கள்.

சம்பந்தன் யார் நான் யார் என்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும். நாங்கள் ஒரு காலமும் எங்களுக்காக போராடியவர்களை காட்டிக் கொடுத்தவர்கள் அல்ல, சந்தி சந்தியாக நின்று முகத்தில் சாக்கை போற்றி வைத்துக் கொண்டு தலையாட்டி காட்டி கொடுத்தவர்கள் அல்ல. அவர்களில் ஒரு தலைவருக்கு பழக்க தோஷமாக போய் விட்டது இப்போது கூட்டத்திலும் தலை ஆடிக் கொண்டே இருக்கின்றது அது தலையாட்டிய பழக்கம்.

1980 ஆம் ஆண்டு இதனைச் சாதித்தோம், 1985இல் இதனைச் சாதித்தோம் 1987இல், 1989இல், 1994இல் 2001இல் 2004இல் இதனைச் தாதித்தோம் என வரலாற்றுப் பட்டியலிடுகின்றார். அதே பட்டியலில் எத்தனையாம் ஆண்டுகளில் யாரைப் போட்டுத் தள்ளினோம், எத்தனையாம் ஆண்டு அரச கூலிப்படையாக சேர்ந்து இயங்கினோம் என்பதனைக் கூற மறந்து விட்டார்.

எங்கள் இருவருடைய சரித்திரத்தையும் நன்றாக துலாவி பார்க்கலாம் எந்த தருணத்திலையும் யாரையும் நாங்கள் காட்டிக் கொடுத்தோமா? அரசு கூலிப் படையாக செய்யப்பட்டோமா? என்பது தமிழ் மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்
Math & Physics Tutoring
(For High School Students)

Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை
Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# இந்தியா திணித்த 13ஆவது திருத்தம் வேண்டாம்! பௌத்த பிக்குகளும் இனவாதிகளும் போர்க்கொடி

இந்தியாவால் வலுக் கட்டாயமாக திணிக்கப்பட்ட 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டாம் என இரண்டு பிக்குகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.எல்லே குணவன்ச தேரர் மற்றும் பெங்க முவே நாலக தேரர் ஆகியோர் அதிபர், பிரதமர் மற்றும் அனைத்து நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கும் இது தொடர்பாக கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.



காவல்துறை காணி அதிகாரங்கள் உள்ளிட்ட சில அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுமாயின் அது நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்கு பாரிய அச்சுறுத்தலாக அமையும் என அந்தக் கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

13வது திருத்தம் இந்தியாவால் திணிக்கப்பட்டது என்றும் இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார மூலோபாயத் திட்டத்தின் ஒரு பகுதியாக அது இலங்கை நாடாளுமன்றத்தில் வலுக் கட்டாயமாக நிறைவேற்றப்பட்டது என்றும் அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 13 ஆவது திருத்தத்தை சர்வஜன வாக்கெடுப்பின்றி முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டாம் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் உள்நாட்டு வளங்கள் மற்றும் சொத்துக்கள் வெளிநாட்டினருக்கு விற்பனை செய்வதை உடனடியாக தடுக்கவும் கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் ஊழல் மற்றும் வரி ஏய்ப்பு மூலம் நாட்டுக்கு இழந்த செல்வம் மற்றும் வளங்களை மீட்டெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைப் போக்குவதற்கு ஏற்றுமதியை அதிகரிப்பது மற்றும் அரச செலவீனங்களைக் குறைப்பது அவசியமானது. இந்தநிலையில் அதிபர் உட்பட அமைச்சரவையில் உள்ள எவரும் உள்ளூர் உற்பத்தியாளர்களை வலுப்படுத்துவதற்கான எந்தவொரு மூலோபாயத் திட்டங்களையும் முன்வைக்கவில்லை என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதுஇவ்வாறிருக்க பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்த தற்போதைய அதிபர் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆணை இல்லை எனவும், அவ்வாறு அதனை அவர் நடைமுறைப்படுத்த 69 இலட்சம் மக்கள் ஆணை வழங்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர உள்ளிட்ட குழுவினர் அஸ்கிரி மகா விகாரைக்கு வருகை தந்து மகா நாயக்கர் உட்பட சங்க சபைக்கு தெரிவித்துள்ளனர்.

அஸ்கிரி பீடத்தைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரரை, 31ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், சுதத் குணசேகர, கல்யாண திரணகம, வசந்த பண்டார, கலாநிதி கபில குணவர்தன உள்ளிட்டோர் சந்தித்தனர். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

நிறைவேற்று அதிபரை மக்களே நியமிக்க வேண்டும் என அரசியலமைப்பு கூறுகிறது. ஆனால் இந்த அதிபர், எம்.பி.க்களால் நியமிக்கப்பட்டுள்ளார். கோட்டாபய ராஜபக்சவுக்கு அதிபராக வருவதற்கு வாக்களித்த அறுபத்து ஒன்பது இலட்சம் மக்களின் அபிலாஷையானது, நாட்டின் ஒற்றுமையை பிளவுபடாமல் பேணிக் காப்பதாகும். புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு அந்த ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எமது உள் அரசியலில் தலையிட இந்தியாவுக்கு உரிமை இல்லை. பதின்மூன்றாவது திருத்தம் இந்தியாவால் நம்மீது கட்டாயப்படுத்தப் பட்டது. அது மக்களால் அங்கீகரிக்கப்படவில்லை. இந்த அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றுபட்ட நமது நாட்டை ஒன்பது துண்டுகளாக உடைத்தது. ஜே.ஆர்.ஜெயவர்தன கூட சில தடைகளுடன் 13ஐ நடைமுறைப்படுத்தினார். காணி அதிகாரங்கள், காவல்துறை அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. முதலமைச்சருக்கு மேல் மத்திய அரசின் சார்பில் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

நாட்டின் ஒற்றுமையைக் காக்க ஏராளமானோர் உயிர் தியாகம் செய்துள்ளனர். மேலும் பலர் ஊனமுற்றுள்ளனர். இப்படிப் பாதுகாக்கப்பட்ட நாடு முழுவதுமாக 13ஐ வைத்து முழுமையாகக் கூட்டாட்சியாக்க அனுமதிக்கப்படுமா என்ற கேள்வியைக் கேட்க வேண்டும்.

ஐம்பது வீதத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் கொழும்பில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுடன் வாழ்கின்றனர். இதனை தமிழ் மக்கள் விரும்பவில்லை. பிரிவினைவாத சிங்கள மற்றும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இது தேவையாக உள்ளது. எமது மாகாணங்கள் இன ரீதியாக பிரிக்கப்படக் கூடாது என்றார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு மக்களாணை கிடையாதுஎன தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் மல்வத்து, அஸ்கிரி,ஸ்ரீ லங்கா ராமான்ய நிகாய,ஸ்ரீ லங்கா அமரபுர உட்பட மகாசங்கத்தினரிடம் வலியுறுத்தியுள்ளது. 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் மக்கள் வாக்கெடுப்பு அல்லது ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும்.13 ஆவது திருத்தத்தை நாட்டு மக்கள் முழுமையாக புறக்கணிப்பார்கள் என்பதை உறுதியாக குறிப்பிட முடியும்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் சூடான் நாட்டுக்கு ஏற்பட்ட கதியே இலங்கைக்கும் ஏற்படும் என்றார்கள்.

# கூட்டமைப்பை பதிவு செய்யக் கூடாது! தலைவர் பிரபாகரன் அன்று கூறியது என்ன?

தமிழ் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்யக்கூடாது என விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் 2004



ஆம் ஆண்டு தெரிவித்ததாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கியச்செல்வம் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர், “2010 இல் இருந்து தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும் என ஈ.பி.எல்.ஆர்.எவ். ஐச் சேர்ந்த சுரேஸ் பிரேமச்சந்திரனும், சிவசக்தி ஆனந்தனும் முதலாவதாக கோரிக்கை முன்வைத்தார்கள். 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் தான் ரெலோவும் இதனைப் பதிவு செய்ய வேண்டும் என தெரிவித்திருந்தது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் 2004 ஆம் ஆண்டு 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டோம். அதில் நானும் ஒருவர்.

தேர்தல் முடிந்த பின்னர் நாம் முதன் முதலில் நாடாளுமன்றம் செல்லவில்லை. கிளிநொச்சியிலே இருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திற்குத் தான் சென்றோம். அதில் அவ்வியக்கத்தின் தலைவர் உள்ளிட்ட பலரும் இருந்தார்கள்.

அப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனிடம் இரண்டு விடயத்தை நான் கேட்டிருந்தேன். முதலாவதாக கருணா குழுவிலே இருந்து வாகரையிலே உயிரிழந்த போராளிகளை மாவீரர் பட்டியலில் சேர்க்க வேண்டும், அதற்கு அவர் சம்மதித்தார்.

இரண்டாவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என கேட்டேன். அப்போது அவர் தெரிவித்தது என்னவெனில் இக் கூட்டமைப்பை பதிவு செய்யக்கூடாது. இதில் உள்ள நான்கு கட்சிகளுக்கும் தனித்தனியே கொள்கைகளும், கோட்பாடுகளும் இருக்கின்றன. அவர்கள் தனித்தனியே செயற்படலாம். தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணைந்து செல்லலாம். அதனை இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என அவர் தெரிவித்திருந்தார்.

இதற்காகத் தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பை நாம் பதிவு செய்யவில்லை. இதுதான் வரலாறு. இதனை மாற்ற முடியாது. இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்’’ என்றார்.


## 5வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு சுப்பிரமணியம் சிவகுமாரன்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சுப்பிரமணியம் சிவகுமாரன் (கவிஞர் செழியன்) அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 03 பெப்ரவரி 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பிரமணியம் சிவகுமாரன் (கவிஞர் செழியன்) அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி

### செல்வி பிரசாந்தி அருச்சுனன்



வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களது முதலாவது ஆண்டுத் திதி நினைவு நாள் 04 பெப்ரவரி 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# ரணில் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாகக் கூறி தென்னிலங்கை இனவாதிகளை தூண்டி விடுகின்றார் - தயான்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாகாண சபைகளின் இயக்கத்தை முழுமையாக முடக்கி விட்டு, அவற்றுக்கு அதிகாரங்களை வழங்கப்போவதாக கூறி அரசியல் நாடகமாடுவதாக கலாநிதி தயான் ஜயத்திலக்க குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 13ஆவது திருத்தச்சட்த்தினை முழுமையாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அறிவித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக, இருந்த போதே, அவருடைய அனுசரணையுடன் மாகாண சபைகளுக்கான தேர்தல் முறைமையை மாற்றுவதற்கான பிரேரணை கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

குறித்த பிரேரரணை நிறைவேற்றப் பட்டதன் காரணத்தினாலேயே தற்போது வரையில மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த முடியாத சிக்கலான நிலைமைகள் தோன்றியுள்ளன.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாக அறிவித்துள்ளார். தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தினை பயன்படுத்தி அச்செயற்பாட்டினை முன்னெடுக்கவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக வெளிப்படையாக கூறுவது வரவேற்கத்தக்க விடயமாக இருந்தாலும், அரசியலமைப்பில் காணப்படுகின்ற விடயமொன்றை முன்னெடுப்பதற்கு இவ்வளவு பிரதிபலிப்புக்களைச் செய்ய வேண்டிய அவசியமில்லை. மேலும் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதற்கு, அல்லது நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு அப்பால் மாகாண சபைகளின் இயக்கத்தினை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும். ஆனால் தேர்தல் நடத்த முடியாதவொரு நிலைமையை ஏற்படுவதற்கு காரணமாக இருந்தவர் ஜனாதிபதி ரணில் தான்.

அவ்வாறு செயற்பட்ட ஒருவர் மாகாண சபைகளின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றுக்கு அதிகாரங்களை வழங்குவதால் ஏற்படப் போகின்ற பயன்கள் என்ன? ஆகவே, அரசியலமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதேநேரம், மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில், தேர்தல் முறைமை திருத்தம் சம்பந்தமான பிரேரணை மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின்னரே, மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தலாம். ஆகவே அதற்காக பாராளுமன்றத்தின் ஊடான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியதே அவர் முன்னுள்ள விடயமாகின்றது.

அவ்வாறிருக்கையில், செயற்படாத மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்கப் போவதாக கூறி, தென்னிலங்கையில், சிங்கள, பௌத்தத்தை மையப்படுத்தி அரசியல் செய்யும் தரப்பினர்களுடன் முரண்படுவதால் எவ்விதமான பயன்களும் இல்லை.

உண்மையில், செயற்படாத மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்கப்பேவதாக தொடர்ச்சியாக கூறுவதால், தென்னிலங்கையில் மீண்டும் 13இற்கு எதிரான கோசங்களே வலுப்பெறும்.

அந்த அடிப்படையில் பார்க்கின்ற போது ஜனாதிபதி ரணில் தனது இருப்பினை தக்கவைத்துக் கொள்வதற்கான அரசியல் நாடகமாடுகின்றாரா என்று கேள்வி எழுகின்றது என்றார்.

## 13ஐ ஒழிக்க முழு ஆதரவு! -சரத்வீரசேகர

அரசியலமைப்பின் 13ஆவது திருத்த சட்டத்தை முற்றாக இல்லாதொழிப்பதே ஒரே வழியாகும் என்று ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, சட்டத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்தால் தமது முழுமையான ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்தார். 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவ்வாறு செய்யாவிடின் 22 ஆவது திருத்தத்தை கொண்டு வந்து 13ஐ இல்லாமல் ஒழிக்க வேண்டும் என்றும் இரண்டில் ஒன்று நடக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி கூட்டத்தில் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதியின் அறிவிப்பு குறித்து கருத்து வெளியிடுகையிலேயே சரத் எம்.பி மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார். 13ஆவது திருத்தம் இலங்கையின் அரசியலமைப்புக்கு ஒரு சாபக்கேடான சட்டமாகும் என்றும் அதை முழுமையாக நடைமுறைப்படுத்த ஒருபோதும் தாம் இடமளிக்கப் போவதில்லை என்றும் குறிப்பிட்டார். ஜனாதிபதி தெரிவித்ததைப் போல அதை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்தால் முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# இணைந்த படிமுறை:-

## குடும்பப் பிணைக்கினைத் தீர்ப்பதற்கான சிறந்த வழி வகை

மணநீக்கம், கணவன் மனைவியிடை பிரிவு, பெற்றோரியம் சார்பாக உள்ள பிரச்சினைகள் அல்லது ஆதனப்பிரிப்பு இத்தகைய குடும்ப சட்டப் பிரச்சினைகள் சம்பந்தமாகப் பெரும்பாலான மக்கள் மன அதிர்ச்சிகளை அனுபவிக்கின்றனர்.

ஒரு கொழுந்து விட்டெரியும் கேள்வியாக இருப்பது யாதெனில் எவ்வாறு இப் பிரச்சினையைக் கையாளுவது என்பதாகும். மிகவும் சிறப்பான தீர்வு என்பது வாழ்க்கைத்துணை இருவரும் பிரச்சினைகளை சமரசமாகத் தங்களுக்குள் தீர்த்துக் கொள்ளுதல். ஆனால் இத்தகைய சிறந்த முடிவு நிலை எட்டப்படுவது என்பது பொதுவாக ஒரு நழுவிச் செல்லும் காரியமாக உள்ளது.

சம்பந்தப்பட்ட தரப்புகளிடையே பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்படாது அல்லது ஒரு சமரச நிலை எட்டப்படாது ஒரு முட்டுக்கட்டை அல்லது ஒத்திசைவற்ற நிலை தோன்றுமிடத்து ஒரு நீதிபதி அவர்களின் குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக அவர்கள் நீதிமன்றத்தை நாடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். நீதிமன்றத்திற்கு இதனை எடுத்துச் செல்லும் போது நீதிமன்ற நடைமுறைக்குள் வரக்கூடிய குடும்பச்சட்ட நடைமுறைகளின் அனைத்து சட்ட நுணுக்கங்களையும் கையாள வேண்டும். இது மிகவும் விரக்தியினை ஏற்படுத்தும் ஒரு விடயமாக அமையலாம். அத்துடன் இந்த வழக்கு நடைமுறை நீதிமன்றத்தில் தொடரும் போது அதற்கு பொறுமை ,பணம் போன்ற இன்னோரன்ன பல விடயங்கள் தேவைப்படும். விடயச் சிக்கற் தன்மையைப் பொறுத்து இதனைத் தீர்ப்பதற்கு வருடங்கள் செல்லலாம். எளிமையாக உள்ள ஒரு குடும்ப வழக்கிற்கு 2-3 வருடங்கள் செல்லலாம்.

கூடிய சிக்கல் நிறைந்த வழக்குகளிற்குக் கூடிய காலம் எடுக்கலாம். சில சந்தர்ப்பங்களில் நீதி மன்ற நடைமுறைக்குள் சில குடும்ப வழக்குகளிற்கு 20 வருடங்கள் கூடச் சென்றுள்ளது. கால அளவுக்கேற்ப பணமும் தேவைப்படும். சம்பந்தப்பட்ட வாழ்க்கைத் துணைகள் இறுதி முடிவுக்காகக் காத்திருக்கும்

அதே வேளை வழக்காடலுக்குரிய செலவும் தொடர்ந்து கூடிச்செல்லுகின்றது. சம்பந்தப்பட்ட தரப்புக்கள் எவ்வளவு கூடிய காலம் காத்திருக்க வேண்டி வருமோ அதற்கேற்ப கூடிய பணமும் செலவழிக்க நேரிடும். இத்தகைய நிதிச் சுமைக்கு மேலதிகமாகச் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நீதிமன்றம் செல்வதற்காக வேலைக்குச் செல்லாது விடுவதனால் வருமான இழப்பு ஏற்படும், நீதிமன்றம் செல்லும்போது பிள்ளை பராமரிப்பிற்கு ஏற்படும் செலவுகள் என்று இது போன்ற மற்றும் செலவுகளும் அடங்கும்.

பெரும்பாலும் வாழ்க்கைத் துணைகள் தங்களை நீதிமன்றில் பிரதிநிதித்துவம் செய்ய சட்டத்தரணிகளை தங்களுக்காக நியமிப்பர். சட்டரீதியான போட்டியில் அல்லது வாதத்தில் தமது தரப்பினருக்காக சட்டத்தரணிகள் வாதிடுவர் .

தமது தரப்பினருக்குரிய சிறந்த தீர்வினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு சட்டத்தரணியும் உறுதி பூண்டிருப்பர். இதிலே வெற்றியீட்டுபவர்கள் யார் என்பதனை அறிவது இதன் நோக்கமாகக் கொள்ளப்படும். நீதிபதியானவர் இரு தரப்புகளினதும் நிலைப்பாட்டை சட்டத்தரணிகளினூடாக செவி மடுத்து அதன் மூலம் ஒரு தீர்ப்பினை வழங்குவார். நீதிபதியின் தீர்ப்பு ஒரு தரப்பு வாழ்க்கைத்துணைக்கு வெற்றியாகவும் மறுதரப்பு வாழ்க்கைத் துணக்கு தோல்வியாகவும் அமையலாம் . பெரும்பாலும் தோல்வி அடையும் தரப்பு வெற்றியடைந்த வாழ்க்கைத்துணக்கு ஏற்பட்ட வழக்குச் செலவுகளைச் செலுத்தும்படி கேட்கப்படுவார். இத்தகைய போட்டிக்குரிய நடைமுறை ஒரு நச்சுத்தன்மை வாய்ந்தது.



பெரும்பாலானவர்க்கு நீதிமன்றங்களினூடாக குடும்ப வழக்குகளுக்காக வழக்காடல் என்பதில் உள்ள செலவு மிகவும் உயர்ந்ததாகவும் ஒரு அழிவை நோக்கியதாகவும் காணப்படுகின்றது. ஒரு உச்சக்கட்டமான தீவிர நிலையில் வங்குரோத்து நிலைக்கும் இட்டுச் செல்லுகின்றது.. இதன் விளைவாக , பிரிந்து செல்லும் இணையர்களுக்கு நீதி மன்றம் செல்வதற்கு இதில் சம்பந்தப்பட்ட செலவு ஒரு பெரும் தடைக்குரிய காரணியாக உள்ளது.

செலவையும் நேரத்தையும் விட விரக்திக்குரியதும் , நீண்ட காலம் எடுக்கும் நீதிமன்ற வாதங்களாலும் மிகவும் பாதகமான விளைவுகளாக மன நல பாதிப்பு, மனவெழுச்சி நலப் பாதிப்பும் அத்துடன் பிள்ளைகளும் தாக்கத்திற்கு உட்படுகின்றனர்.

மணநீக்கம் அல்லது பிரிந்து செல்லும் முடிவினைக் கருதுகின்ற பட்சத்தில் ஒரேயொரு சாத்தியமான தெரிவு மட்டும் உண்டென ஒருவர் கருதுகின்றார். அதாவது நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வது தான் வழி என்று .ஆனால் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இச்செலவினைத் தாக்குப்பிடிக்க முடியாத விடத்து அல்லது ஒரு நீதி மன்ற நடைமுறை மூலம் தீர்க்க வேண்டாத விடத்து என்ன செய்யலாம்? ஆம், நீதி மன்ற நடைமுறைக்கு வெளியில் நீங்கள் நீதியைத் தேடலாம்.

நீதி மன்ற நடைமுறைக்கு வெளியில் நீங்கள் குடும்ப விடயங்களை சமரசம் செய்து கொள்வதற்காக நான் ஒரு புதிய நடைமுறையினை இதனை வாசிப்பவர்களுக்கு அறிமுகப்படுத்த விரும்புகின்றேன்.

இது குடும்பச் சட்டத்தினுடைய ஒரு கூட்டுப் பயிற்சி நடைமுறை எனலாம். இன்றைய காலத்தில் இந்த நடைமுறை உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது தற்பொழுது கனடாவிலும் உத்வேகம் அடைந்து அங்கீகாரமும் பெற்று வருகின்றது. ஒரு பத்தாண்டுகளிற்கு மேலாகக் கனடாவிலும் இது இருக்கின்ற போதிலும் இத்தகைய கூட்டுப் பயிற்சி பற்றியதான தெளிவும் உண்மையில் நன்கு அறியப்பட்டதாகவும் இல்லை.

குடும்பச் சட்டத்தில் கூட்டுப் பயிற்சி என்பது நீதிமன்ற நடைமுறையில் ஒரு சாத்தியமான தீர்விக்குரிய வழி என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. இரு தரப்பினருக்கும் வெற்றியளிக்கும் நடைமுறை என்பதுடன் அதன் விளைவாகப் பிள்ளைகளுக்கும் இது சிறந்த நடைமுறை ஆகும்.

ஒரு நடுவர் மன்ற அல்லது மத்தியஸ்தம் செய்கின்ற படிமுறையுடன் இதனைக் குழப்பிக் கொள்ளக்கூடாது. இது முற்றிலும் வேறுபட்ட ஒரு நடைமுறை தேவை ஏற்படின் குடும்ப சட்டத்தினைக் கையாளும் சட்டத்தரணிகளை அல்லது வேறு தொழில் வல்லுனர்களை இதற்காகச் சம்பந்தப்பட்ட தரப்புகள் அவர்களைப் பணிக்கமர்த்துவதன் மூலம் இரு சாராரினதும் நலனைக் கருத்திற் கொண்டு தீர்வினைக் காணலாம். இரு தரப்பினரும் செயற்திறனுடன் பங்கேற்று இரு சாராரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வினை அடைய இந்நடைமுறை ஊக்குவிக்கும் .

இணைந்த படிமுறையின் நலன்களாக இருப்பவை ஒன்றுக்கொன்று எதிரான விரோத மனப்பான்மையுடன் இயங்கும் நீதிமன்ற நடைமுறையிலும் பெருமளவில் அதனை விஞ்சுகின்ற ஒரு படிமுறை ஆகும். செலவைப் பொறுத்த மட்டில் சராசரியாக உங்கள் குடும்பப் பிணக்கினை நீதி மன்றத்திற்குக் கொண்டு செல்வதற்கு ஏற்படும் மொத்தச் செலவின் ஐந்தில் ஒரு பங்காக இருக்கும் .

நேரத்தைப் பொறுத்த மட்டிலும் சராசரியாக நீதிமன்றத்தில் செலவிடும் நேரத்திலும் மூன்றில் ஒரு பங்காக அமையும். குடும்பச் சட்டம் தெரிந்த சட்டத்தரணிகள் ,மற்றும் துறைசார் நிபுணர்கள் , தொழில் வல்லுனர்கள் போன்றோரின் அனுபவத்தினைப்பெறும் வாய்ப்பையும் பெற்றுக்கொள்வீர்கள்.உங்கள் குடும்ப விடயங்கள் யாவும் நீதிமன்ற நடைமுறையில் பொதுவெளியில் வெளிப்படுத்தப்படுவது போல் அன்றி உங்கள் குடும்ப விடயங்கள் யாவும் பிரத்தியேகமாக வைக்கப்படும். நீங்களும் படிமுறையில் நேரடியாகக் கலந்து கொள்வதன் மூலம் ஒருவருக்கொருவர் ஏற்றுக் கொள்ளக் கூடியதான பெறுபேற்றினைப் (முடிவினைப்) பெற்றுக் கொள்ளலாம். இவை யாவும் மொத்த நலன்களில் ஒரு சிலவே எனலாம்.

நீங்களாகவே பார்க்கக் கூடியதென்னவெனில் குடும்பச் சட்டத்தின் இணைந்த பயிற்சி நடைமுறையானது எல்லோருக்கும் அதாவது இரு சாராருக்கும் வெற்றி —வெற்றி என்ற நிலையையே தோற்றுவிக்கும் . இதனை நான் ஒரு சிறந்த அல்லது மேம்பட்ட வழி என்பேன் .

உங்களது குடும்பப்பிணக்குகளை இணைந்த படிமுறை மூலம் தீர்த்துக் கொள்வதற்காகத் பின்வரும் இலக்கத்துடனும் ,விலாசத்துடனும் தொடர்பு கொள்ளலாம்.

**Thelma Williams**

**Barrister Solicitor & Notary Public (Ontario)**

**LL.B (Sri Lanka)**

**Address:**

**Suite #300 -10 Milner Business Court- Scarborough- Ontario**

**Tel: # 647- 777- 8424**

(சேவை ஆங்கில / தமிழ் மொழியில் வழங்கப்படும்.)

LAW OFFICE of THELMA WILLIAMS

Barrister, Solicitor, Notary Public, Commissioner (ON)
LL.B (Sri Lanka)

❑ FAMILY LAW:
- Divorce
- Separation
- Property Division

❑ REAL ESTATE

❑ WILLS and ESTATES

❑ EMPLOYMENT LAW
- ODSP, CPP disability
- Wrongful Dismissal
- Long-term Disability

❑ ADMINISTRATIVE LAW

❑ POWERS OF ATTORNEY, AFFIDAVITS, STATUTORY DECLARATIONS

❑ விவாகரத்து, சட்டப்படி பிரிதல், சொத்துக்களை பிரித்தல் போன்ற குடும்ப வழக்குகள்,

❑ காணி, வீடு வாங்குதல், விற்றல் தொடர்பான சட்டங்கள்

❑ உயில் மற்றும் எஸ்ரேற்ஸ்

❑ தொழில்சார் சட்டம்

❑ நிர்வாக சட்டம்

❑ சட்ட ஆவணங்களை உருவாக்குதல்

கனேடிய சட்டத்துறையில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த
சட்ட வல்லுனர்களின் நம்பிக்கையும், உத்தரவாதமுமான சேவை

Quality, Dependable Service with many years of Canadian legal experience.

TEL:647-777-8424
Suite #300, 10 Milner Business Court,
Scarborough, Ontario M1B 3C6
(just 2 minutes north of HWY 401)

PLEASE CALL FOR AN APPOINTMENT

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்வரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும்.


ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

28 ஜனவரி 2023 முதல் 03 பெப்ரவரி 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

### மேலதிக விபரங்களுக்கு:-

### ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை மருதப்பு

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு கனகசபை மருதப்பு அவர்களது 10வது ஆண்டு நினைவு நாள் 06 பெப்ரவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு கனகசபை மருதப்பு அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தவேந்திரராணி தேவரத்தினம்

யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவுநாள் 29 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள். **“நல்லதை நினை நடப்பது நடக்கும்”**

## 25வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வடிவேலு சிவக்கொழுந்து

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டி, கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வடிவேலு சிவக்கொழுந்து அவர்களது 25வது ஆண்டு நினைவுநாள் 02 பெப்ரவரி 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வடிவேலு சிவக்கொழுந்து அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பொன்னையா தம்பையா

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகக் கொண்டிருந்த திரு பொன்னையா தம்பையா அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 29 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பொன்னையா தம்பையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 25வது ஆண்டு நினைவஞ்சலி



### Dr கந்தையா இராஜதுரை

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த டாக்டர் கந்தையா இராஜதுரை அவர்களது 25வது ஆன்டு நினைவு நாள் 31 ஜனவரி 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் டாக்டர் கந்தையா இராஜதுரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி அன்னலெட்சுமி செல்வரெத்தினம்

நயினாதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி அன்னலெட்சுமி செல்வரெத்தினம் அவர்களது 31ம் நாள் நினைவு நாள் 30 ஜனவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி அன்னலெட்சுமி செல்வரெத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஸ்ரீபதி ஞானாம்பிகை

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானாம்பிகை ஸ்ரீபதி அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் திதி06 பெப்ரவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி ஞானாம்பிகை ஸ்ரீபதி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்ட வனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



28 ஜனவரி 2023 சனிக்கிழமை இணுவிலைச் சேர்ந்த திர நல்லதம்பி தங்கரத்தினம் அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.




29 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பொன்னையா தம்பையா அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.



29 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தபேந்திரராணி தேவரத்தினம் அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.



30 ஜனவரி 2023 திங்கட்கிழமை நயினாதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி அன்னலெட்சுமி செல்வரெத்தினம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.



31 ஜனவரி 2023 செவ்வாய்க்கிழமை தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த Dr கந்தையா இராஜதுரை அவர்களது 25வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.



02 பெப்ரவரி 2023 வியாழக்கிழமை திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொல்லன்கலட்டியை வதிவிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வடிவேலு சிவக்கொழுந்து அவர்களது 25வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.



02 பெப்ரவரி 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கஜேந்திரா ஜெய்குமாரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஹரிஷ் கஜேந்திராவின் 12வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் ஹரிஷ் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



03 பெப்ரவரி 2023 வெள்ளிக்கிழமை உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சுப்பிரமணியம் சிவகுமாரன் (கவிஞர் செழியன்) அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.



27 ஜனவரி 2023 வெள்ளிக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

## 5வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் ஹரிகேஷ் சங்கீபன்

லண்டனில் வசிக்கும் திரு,திருமதி சங்கீபன் யசோதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஹரிகேஷ் சங்கீபனின் ஐந்தாவது பிறந்த நன்நாள் 05 பெப்ரவரி 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் செல்வன் ஹரிகேசும் அவரது பெற்றோர்களும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழவுள்ளார்கள். அகவை ஐந்து காணும் செல்வன் ஹரிகேஷ் நோய் நொடியின்றி சீரும் சிறப்புடன் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

## 2வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வி இரா பிரபுராஜ்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி பிரபுராஜ் அனித்தா தம்பதிகளின் செல்வப் புதல்வி இரா பிரபுராஜின் முதலாவது பிறந்த நன்நாள் 09 பெப்ரவரி 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் செல்வி இராவும் அவரது பெற்றோர்களும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழவுள்ளார்கள். அகவை இரண்டு காணும் செல்வி இரா நொடியின்றி சீரும் சிறப்புடன் பார் போற்றும் பைந்தமிழ் மகளாக வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

## 22வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் சஞ்சயன் வசந்தகுமார்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி வசந்தகுமார் ராஜவினோதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சஞ்சயனின் 22வது பிறந்த நன்நாள் 27 ஜனவரி 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் செல்வன் சஞ்சயனும் அவரது பெற்றோர்களும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். அகவை இருபத்திஇரண்டு காணும் செல்வன் சஞ்சயன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

# வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி நடத்திய தமிழ் மரபுத் திங்கள் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது!

ஸ்காபுறோவில் அமைந்துள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பரிபாலனத்தின் கீழ் இயங்கும் வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி நடத்திய தமிழர் மரபுரிமை திங்கள் விழா கடந்த 29 ஜனவரி 2023 இன்று ஞாயிற்றுக்கிழமைகல்லூரி அரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.





சரியான மதியம் 12.00 மணிக்கு மங்கள விளக்கேற்றத்துடன் விழா ஆரம்பமானது. திருமதி மதுநந்தினி தயானந்தா அவர்கள் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரியின் முதல்வர் திருமதி கோதை அமுதன் உரையாற்றினார். அவர் தனது உரையில் வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியை ஆரம்பித்தது முதல் இன்று வரை கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடனும் தமிழின் மீதும் சைவத்தின் மீதும் அதீத பற்றுக் கொண்ட சிவஸ்ரீ விஜயகுமாரக் குருக்கள் அவர்களும் அவரது துணைவியார் ஸ்ரீமதி ஜெயந்தி விஜயகுமாரக் குருக்கள் அவர்களும் வழங்கி வருகின்ற தொடர் ஒத்துழைப்பை மனம் நிறைந்து பாராட்டினார்.

அவரைத் தொடர்ந்து ஆசிரியை திருமதி வனிதா இராஜேந்திரம் அவர்கள் சைவத்தையும் தமிழையும் எமது எதிர்காலச் சந்ததிக்கு எடுத்து இயம்பும் வகையில் வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி ஆற்றி வரும் அரும் பணிகளைச் சிறப்பாக எடுத்துரைத்தார்.

நடனம், நாட்டியம், வில்லிசை நாடகம் பட்டி மண்டபம் மாணவர்கள் உரைகள் என பல்வேறுபட்ட கலைப்படைப்புக்களை மிகச் சிறப்பாக கல்லூரி மாணவர்களால் மேடையேற்றப் பெற்றன. அரங்கத்தில் இருந்த பார்வையாளர்கள் தங்கள் புருவங்களை உயர்த்தி கண் இமைக்காது. பார்த்து ரசித்தார்கள். உண்மையில் கல்லூரியின் ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். பாராட்டுக்குரியவர்கள்.

கனடாவின் மத்திய, மாநில நகர, கல்விச்சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இவ்வளவு மாணவர்களையும் ஒன்றிணைத்து மிகச் சிறப்பாக ஓர் விழாவினைச் செய்து முடித்த சிவஸ்ரீ விஜயகுமாரக் குருக்கள் அவர்களையும் ஆசிரியர்களையும் மாணவர்களின் பெற்றோர்களையும் நெஞ்சாரப் பாராட்டுகின்றோம். வாழ்த்துக்கள்! – **TKP**











தமிழீழத்தின் இசை வேந்தன்

# வர்ண.ராமேஸ்வரன்

நினைவரங்கத்தில்

உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகையின்

## 30வது ஆண்டு விழா

# இசைச் சங்கமம் 2023

தமிழக - கனடிய பிரபல பக்கவாத்தியக் கலைஞர்களுடன்

**கலைமாமணி**

## ராஜேஸ் வைத்தியா



**6:00PM**
CHINESE CULTURAL CENTRE
**5183 SHEPPARD AVE. EAST**
SCARBOROUGH


**APRIL 23 2023**

அன்பளிப்பு

| VVIP | VIP | |
|---|---|---|
| $200 | $100 | $50 |

**தொடர்புகட்கு: ஈழநாடு பரமேஸ் 416-841-9600**

விழா சரியாக மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்.


VADHYA BRINDAM
Uniting 108 Artists
Toronto
Sunday March 19th, 2023 at 5:30 pm
at
Richmond Hill Centre for the Performing Arts
10268 Yonge St, Richmond Hill,
ON L4C 3B7
FOR MORE INFORMATION:
PLEASE CALL
647-808-5764

# மீண்டும் பதின்மூன்றா?



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –


இதனால் நாடு பிளவுபடாது. விசேடமாக 13ஆவது திருத்தம் தொடர்பில் ஐந்து நீதிபதிகள் அடங்கிய குழுவின் தீர்மானத்தின்படி பார்த்தால் நாம் ஒற்றையாட்சிக்குள் இருக்கிறோம். அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு நான் உடன்படுகின்றேன். நாம் தற்போது உருவாக்கிக் கொண்டுள்ள மாகாண சபைகளுக்கு லண்டன் நகர சபைக்குள்ள அதிகாரங்கள் கூட கிடையாது. லண்டன் நகரசபைக்கு இதனை விடவும் அதிகாரங்கள் உள்ளன. எனவே இதனை பெடரல் இராச்சியம் எனக் கூற முடியுமென நான் நினைக்கவில்லை– ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க

13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்த் தரப்பிடமிருந்து தான் முதலில் வெளிப்பட்டது. ஆறு கட்சிகள் இணைந்து இந்தியாவை நோக்கிக் கூட்டுக் கோரிக்கையை வைத்த பொழுது அது ஒரு வாதப் பொருளாக மாறியது. கடந்த தைப் பொங்கல் விழாவில் வைத்து ரணிலும் அதைத் தான் சொன்னார்.

இப்பொழுது ஜெய்சங்கரும் அதைத்தான் கூறியிருக்கிறார்.ஒரு இடைக் கால ஏற்பாடாக 13ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று.அவர் அவ்வாறு கூறுவதற்கு சில கிழமைகளுக்கு முன்பு தயான் ஜயதிலக்கவும் அதுபற்றிக் கூறியிருந்தார். 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு 15 ஆண்டுகள் அவகாசம் கொடுக்க வேண்டும் என்று தயான் கூறுகிறார். ரணில் விக்ரமசிங்க கூறுகிறார் தனக்கு ஒன்றரை ஆண்டுகள் தேவை என்று. எனவே கூட்டிக்கழித்துப் பார்த்தால் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவது என்பது ஒரு வலிமையான கருத்தாக மேலெழுகிறது.

அது ரணில் விக்கிரமசிங்கவுக்கு வசதியானது. அவர் முன்பு மைத்திரியோடு ஆட்சியைப் பகிர்ந்த கால கட்டத்தில் சம்பந்தரோடு இணைந்து உருவாக்கிய ஒரு புதிய யாப்புக்கான இடைக்கால வரைபானது 13ஆவது திருத்தத்தைக் கடந்து செல்கின்றது. அதை அவர் எக்கிய ராஜ்ய என்று கூறினார். அப்படி ஒரு தீர்வை கட்டியெழுப்புவது குறித்து அவர் இந்தியாவுக்கு தெரிவித்திருக்கவில்லை. தமிழ்த் தரப்பும் தெரிவித்திருக்கவில்லை. அவ்வாறு தமக்கு தெரிவிக்கவில்லை என்பதனை அப்போதிருந்த இந்தியத் தூதுவர் சம்பந்தரை சந்தித்தபொழுது குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டியிருந்தார்.

அது சண்டே டைம்ஸ் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. ஆனால் இப்பொழுது எக்கிய ராஜ்யவிலிருந்து கீழிறங்கி மீண்டும் 13ஐ முழுமையாக அமுல்படுத்துவது என்ற நிலைக்கு அரசியல் வந்திருக்கிறது. மகிந்தவும் 13ஐ ஏற்றுக் கொள்கிறார், சஜித்தும் 13ஐ ஏற்றுக் கொள்கிறார், எனவே பெரிய சிங்களக் கட்சிகள் மத்தியில் அதற்கு எதிர்ப்பு இல்லை. அதனால் 13ஐ முழுமையாக அமல்படுத்துவது என்ற விடயத்தில் ரணிலுக்குப் பெரிய சவால்கள் இல்லை, மேலும் அதன் மூலம் இந்தியாவை வைத்துத் தமிழ்த் தரப்பைக் கையாள முடியும் என்றும் அவர் நம்புவார்.

இந்தியா கடந்த ஆண்டு இலங்கைத் தீவில் ஒப்பீட்டளவில் அதிகமாகப் பெற்று விட்டது. பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் முதலில் உதவிய நாடாகவும் அதிகமாக உதவிய நாடாகவும் இந்தியா காணப்படுகிறது. அதன் மூலம் இந்தியா இலங்கை மீதான தனது பிடியை ஒப்பீட்டளவில் அதிகரித்த அளவில் இறுக்கிக் கொண்டு விட்டது. கடந்த 13 ஆண்டுகளில் இந்தியா இலங்கைத்தீவில் அதிகம் பெற்றுக் கொண்ட ஒரு ஆண்டாக கடந்த ஆண்டைக் குறிப்பிடலாம். கடனை மீளக்கட்டமைக்கும் விடயத்திலும் சீனாவை



முந்திக் கொண்டு இந்தியா இலங்கைக்கு சாதகமாக முடிவுகளை எடுத்தது. இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால், இந்தியா கடனை மீளக் கட்டமைக்கத் தயார் என்ற செய்தியை இந்து பத்திரிகையைப் பார்த்துத் தான் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி அறிந்து கொண்டார் என்பது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வருவதை இந்தியா விரும்பவில்லை என்று கருதப்பட்டது. ஆனால் இந்தியாவை சுதாகரிப்பதில் அவர் கடந்த ஆண்டு முழுவதிலும் வெற்றிகரமாக உழைத்திருப்பதாகவே தெரிகிறது. அவரை இந்தியாவுக்கு வருமாறு ஜெய்சங்கர் கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்திருக்கிறார். இவ்வாறு நெருக்கடியான காலத்தில் உதவி புரிந்ததன் மூலம் இந்தியா சீனாவை முந்திக் கொண்டு கொழும்பை அதிகம் நெருங்கி வரலாமா என்று முயற்சிக்கின்றது. இவ்வாறு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திரப் போட்டிக்குள் ஈழத் தமிழர்களை நுட்பமாக சிக்க வைக்கும் தந்திரம் மிக்கவர் ரணில் விக்கிரமசிங்க என்பதே ஈழத் தமிழர்களுக்கு இதிலுள்ள பாதகமான அம்சம் ஆகும்.

தந்திரசாலியான ரணில் மூன்று முனைகளில் விடயங்களை அணுகுகிறார். முதலாவது தமிழ்த் தரப்போடு பேச்சுவார்த்தை. இரண்டாவது இந்தியாவை வளைத்துப் போடுவது. மூன்றாவது ஐநாவை சுதாகரிப்பது. ஒருபுறம் 13,இன்னொருபுறம் நிலைமாறுகால நீதி. இந்த இரண்டையும் சமாந்தரமாக அவர் முன்னெடுக்க முயற்சிக்கக்கூடும். தென்னாபிரிக்கப் பாணியிலான நல்லிணக்க முயற்சி என்று கூறிக்கொண்டு அவர் நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளை புதிய வடிவத்தில் உயிர்ப்பிக்க முடியும். அதன் மூலம் அவர் ஐநாவைச் சமாளிக்கலாம். ஐநா தீர்மானங்களில் 13 ஆவது திருத்தம் ஒரு தீர்வாக முன்வைக்கப்படுகிறது. இந்தியா அதை ஊக்கிவித்தது. எனவே நிலைமாறுகால நீதி,13வது திருத்தம் என்பவற்றின் ஊடாக ரணில் பல இலக்குகளை அடைய முயற்சிக்கிறார்.

கடந்த 21 ஆம் தேதி சம்பந்தரையும் சுமந்திரனையும் அவர் சந்தித்த பொழுது அவர் தெரிவித்த கருத்துக்களின் பிரகாரம் 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவதற்குரிய சாத்தியமான வழிமுறைகளை அரசாங்கம் சிந்திக்கிறது என்ற ஒரு தோற்றம் ஏற்படத்தக்க விதத்தில் கதைத்திருக்கிறார். கடந்த 26 ஆம் திகதி நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் விக்னேஸ்வரன் ஜனாதிபதியிடம் ஓர் அறிக்கையை கையளித்துள்ளார். அதில் மாகாணத்திடம் இருந்து மத்திய அரசாங்கம் பறித்துக் கொண்ட அதிகாரங்களை மீளப் பெறுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அதேசமயம் அக்கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி ரணில் நாம் தற்போது உருவாக்கிக் கொண்டுள்ள மாகாண சபைகளுக்கு லண்டன் நகரசபைக்குள்ள அதிகாரங்கள் கூட கிடையாது. லண்டன் நகரசபைக்கு இதனை விடவும் அதிகாரங்கள் உள்ளன. எனவே இதனை பெடரல் இராச்சியம் எனக் கூறமுடியுமென நான் நினைக்கவில்லை என்று கூறியுள்ளார். அத்துணை பலவீனமான 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவதை சிங்களக் கட்சிகள் எதிர்க்கக் கூடாது என்று அவர் கூற வருகிறாரா?

13–வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்தப் போவதாக ஒரு தோற்றத்தை கட்டியெழுப்புவதன் மூலம் அவர் இந்தியாவைத் திருப்திப்படுத்தலாம் ஒரு பகுதி தமிழ்க் கட்சிகளைத் திருப்திப்படுத்தலாம். ஐநாவையும் திருப்திப்படுத்தலாம்.

இதில் பதிமூன்றாவது திருத்தத்தை ஒரு இடைக்கால ஏற்பாடாகக்கூட ஏற்றுக் கொள்ளாத தமிழ்த் தரப்புகள் என்ன செய்யப் போகின்றன? தமது தீர்வு முன்மொழிவை நோக்கி அக்கட்சிகள் கடந்த 13 ஆண்டுகளாக எப்படி உழைத்திருக்கின்றன? என்னென்ன தியாகங்களைச் செய்திருக்கின்றன? ஒரு அரசியல் இலக்கை முன் வைத்து அதை நோக்கி உழைக்கத் தேவையான கட்டமைப்புகள் தமிழ்க் கட்சிகளிடம் உண்டா? தாம் விரும்பும் ஒரு தீர்வுக்காக போராடவோ தியாகம் செய்யவோ எத்தனை தமிழ் அரசியல்வாதிகள் தயார்? இந்த வெற்றிடத்தைத் தான் ரணில் விக்ரமசிங்க வெற்றிகரமாக கையாளப் பார்க்கிறார். இந்த வெற்றிடத்தைத் தான் ஜெய்சங்கர் தீர்வைப் பற்றி பேசுவதே தீர்வு ஆகி விடாது என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்.

அதாவது பொருளாதார நெருக்கடியின் பின்னரான தமிழ் அரசியல் எனப்படுவது மீண்டும் ஒருதடவை அதன் இயலாமையை நிரூபித்துக் கொண்டிருக்கிறது. உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை எதிர்கொள்வதில் மட்டுமல்ல, இந்தியாவை எதிர்கொள்வதில், ஐநாவை எதிர்கொள்வதில், சீனாவை எதிர்கொள்வதில், உலக சமூகத்தை எதிர்கொள்வதில், குறிப்பாக, மேற்சொன்ன அனைத்துத் தரப்புகளையும் கெட்டித்தனமாகக் கையாளும் ரணிலை எதிர்கொள்வதில் தமிழ்த் தரப்பு மீண்டும் ஒரு தடவை தோற்கப் போகிறதா?

அண்மை நாட்களாக தமிழ் சமூக வலைத்தளங்களிலும் கைபேசிச் செயலிகளிலும் ஒரு ரிக் ரொக் காணொளி தொடர்ந்து பகிரப்பட்டு வருகிறது. அதில் இறுதிக் கட்டப் போரில் தமிழ் மக்களைத் தோற்கடிப்பதற்காக என்னென்ன நாடுகள் என்னென்ன உதவிகளைச் செய்தன என்ற விபரம் சுருக்கமாகத் தரப்படுகிறது. இந்தியாவில் தொடங்கி கிரேக்கம் வரையிலும், உலகப் பேரரசுகள்,அமெரிக்காவுக்கு எதிரான சிறிய நாடுகள், ஐநா,ஐரோப்பிய ஒன்றியம், இஸ்லாமிய நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் என்று உலகின் பெரும்பாலான நாடுகள் அவ்வாறு உதவியுள்ளன. கோட்பாட்டு வேறுபாடுகளுக்கு அப்பால், மத வேறுபாடுகளுக்கு அப்பால், உலகம் முழுவதிலும் உள்ள பெரும்பாலான பலசாலி நாடுகள் ஒரு சிறிய மக்கள் கூட்டத்தை சுற்றிவளைத்திருக்கின்றன என்பதனை அச்சிறிய காணொளி விவரிக்கின்றது.

ஆயின், ஐநாவும் உட்பட உலகின் பெரும்பாலான நாடுகள் ஈழத் தமிழர்களைத் தோற்கடிப்பதற்காக ஒன்று திரண்டனவா? அவை அவ்வாறு திரளக் காரணம் என்ன?

பிராந்தியத்தில் எதிரும் புதிருமாக காணப்படும் அமெரிக்கா–சீனர் இந்தியா –சீனர் இந்தியா–பாகிஸ்தான் ஆகிய நாடுகளை தமிழ் மக்களுக்கு எதிராக ஒரே கோட்டில் கொண்டு வந்து நிறுத்த எப்படி இலங்கை அரசாங்கத்தால் முடிந்தது?

இஸ்ரேல்–ஈரான் ஆகிய எதிரும் புதிருமான நாடுகளை எப்படித் தமிழ் மக்களுக்கு எதிராக ஒரே கோட்டில் கொண்டு வந்து நிறுத்த முடிந்தது ? சிங்கள மக்கள் அரசுடைய ஒரு தரப்பாக இருப்பதுதான் அதற்குக் காரணமா? அப்படியென்றால் அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்கள் இதிலிருந்து எதைக் கற்றுக் கொள்ள வேண்டும்?

ஒரு சிறிய மக்கள் கூட்டத்துக்கு எதிராக முழு உலகமும் எப்படி நீசமாக மாறியது? பிராந்தியத்தில், அனைத்துலகில், எதிரெதிரான சக்திகளை எப்படி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு எதிராகத் திருப்பினார்? என்ற கேள்விகளுக்கு தமிழ் மக்கள் விடை கண்டு பிடிக்க வேண்டும் .

அந்த விடைகளைக் கடந்த 13 ஆண்டுகளாக கண்டு பிடிக்க தவறிய வெற்றிடத்தில் தானா இப்பொழுது பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன? 13 மீண்டும் அரங்கிற்குள் வந்திருக்கிறது?

# பலமடையும் பாதுகாப்பு உறவு

சில ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் அமெரிக்கா, இலங்கையில் ஒரு கூட்டு கடற்படைப் பயிற்சியை நடத்தியிருக்கிறது. காரட் 2023 என சுருக்கமாக அழைக்கப்படும், ஒத்துழைப்பு மற்றும் தயார் நிலைப் பயிற்சி என்ற தொடர்கூட்டுப் பயிற்சியின் இந்த ஆண்டுக்கான பயிற்சிகள் பெரியளவில் இடம் பெற்றிருக்கின்றன. 2015ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர், மைத்திரி ரணில் அரசாங்கம் பதவியில் இருந்த போது, அமெரிக்க போர்க்கப்பல்களின் இலங்கை



வருகை மற்றும் கூட்டுப் பயிற்சிகள் அதிகளவில் இடம் பெற்றிருந்தன. அத்துடன் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பும் அதிகரிக்கப்பட்டு, அமெரிக்க போர்க் கப்பல்களுக்கு இலங்கை துறைமுகம் மற்றும் விமான நிலையங்கள் வழியாக விநியோகங்களை மேற் கொள்ளும் நடவடிக்கைகளும் இடம் பெற்றன.

ஆனால் 2019இல் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தவுடன், அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடுகள், திட்டங்கள் மற்றும் அதற்கான முயற்சிகளை முடிவுக்குக் கொண்டு வந்திருந்தார்.

சீனாவைத் திருப்திப்படுத்தும் நோக்கில் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால், இலங்கையின் ஊடாக இந்தியப் பெருங்கடலில் தனது முயற்சிகளைத் தொடருவதில் அமெரிக்கா நெருக்கடிகளைச் சந்தித்தது.

அமெரிக்காவின் பாதுகாப்புத் திட்டத்தில், இந்தோபசுபிக் மூலோபாயம் தான் பிரதானமானது. இந்தோ பசுபிக்கில் அமெரிக்கா தனது பெரும் படைகளை நிறுத்தியிருந்தாலும், குறிப்பாக இந்தியப் பெருங் கடலில் அதற்குச் சில போதாமைகள் இருப்பதை மறுக்க முடியாது. இந்தியா வுடன் பாதுகாப்பு ரீதியாக கைகோர்த்திருப்பது நம்பிக்கையளிக்கும் விடயமாக இருந்தாலும், இலங்கையில் ஆதிக்கத்தை நிலைநாட்டுவது அமெரிக்காவுக்கு முக்கியம்.

அதற்காக மைத்திரி ரணில் அரசாங்கத்தை தாராளமாகப் பயன்படுத்திக் கொண்டது. ஆனால் கோட்டாவின் அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், பாதுகாப்பு ஒத்துழைப்புகளில் சுருக்கம் ஏற்பட்டது. ஏனோ தானோ என்ற வகையில், மட்டுப்படுத்தப்பட்ட கூட்டுப் பயிற்சிகள் மட்டும், கடந்த மூன்றாண்டுகளில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அமெரிக்கா, இலங்கை இராணுவத்துடன் கூட்டுப் பயிற்சிகளை மேற் கொள்வதை தவிர்த்து வருகிறது.

அதற்கு முக்கிய காரணம் போர்க்கால மீறல்கள் மற்றும் பொறுப்புக் கூறல் நிலுவைகள் தான்.

ஆனால் இலங்கை கடற்படையை பலப்படுத்துவதிலும், அதனுடன் ஒத்துழைப்பை பலப்படுத்துவதிலும், அமெரிக்கா அதிக ஈடுபாடு காட்டி வருகிறது. மைத்திரி ரணில் கூட்டு அரசாங்கத்தின் காலத்தில் இலங்கைக் கடற் படையின் சிறப்புப் படைப் பிரிவாக மரைன் படைப்பிரிவை உருவாக்கி, பயிற்சி அளித்து, ஆயுதங்களை வழங்கி, அவற்றுடன் தொடர் பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அமெரிக்க கடலோரக் காவல்படையின் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட மூன்று ஆழ் கடல் ரோந்துக் கப்பல்களை அமெரிக்கா இலங்கை கடற்படைக்கு வழங்கியிருக்கிறது. அவை சமுத்ர, கஜபாகு, விஜயபாகு ஆகிய பெயர்களுடன் தற்போது கடற்படையில் இணைந்திருக்கின்றன. கடைசியாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் கடந்த ஆண்டு இறுதியில் கடற்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட விஜயபாகு என்ற போர்க் கப்பல், இலங்கை கடற்படையிலுள்ள கப்பல்களிலேயே அதிநவீன ஆயுதங்களைக் கொண்டதாகும்.

அதன் பிரதான ஆயுதமாகிய 76 மில்லி மீற்றர் பீரங்கிகளை இயக்குவதற்கு, சுடுநர்கள் மேல் தளத்துக்கு செல்ல வேண்டியதில்லை. கட்டளை மையத்தில் இருந்தே ரேடரில் இயக்கப்படும் அந்தப் பீரங்கிகளை இயக்க முடியும். அது 16 கடல் மைல் வரை சுடக் கூடியது.

அத்துடன் 96 கடல் மைல் வரை கணகாணிக்க கூடிய அதிநவீன ரேடர் தொகுதியையும் இந்தக் கப்பல் கொண்டிருக்கிறது. இவ்வாறாக இலங்கை கடற்படையை வலுப்படுத்தி வந்துள்ள அமெரிக்காவுக்கு கோட்டாவின் ஆட்சிக் காலம் கருமை படர்ந்த ஒன்றாகவே இருந்து வந்தது. அப்போது அரசாங்கம் கொரோனா கட்டுப்பாடுகளை காரணம் காட்டி அமெரிக்க கடற்படையினருடனான கூட்டுப் பயிற்சிகளையும் சிறியளவில் மட்டுப்படுத்தியிருந்தது.

ஆனால் இந்தமுறை அமெரிக்க இலங்கை கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி மிக விரிவாக இடம்பெற்றிருக்கிறது. ஜனவரி 19ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரையான ஒரு வாரம், இந்த காரட் 2023 கூட்டுப் பயிற்சிகள் பல முனைகளில் இடம் பெற்றிருக்கின்றன. மன்னாரில் முள்ளிக்குளத்திலும், திருகோணமலையிலும், கொழும்பு மற்றும் நீர்கொழும்பு கடற்பகுதியிலும் என மூன்று திசைகளில் இந்தக் கூட்டுப் பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

இதில் பங்கேற்பதற்காக அமெரிக்க கடற்படையின், ஈரூடகத் தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும், தரையிறக்க மற்றும் போக்குவரத்து போர்க்கப்பலான யுஎஸ்எஸ் அங்கரேஜ் 19ஆம் திகதி 477 கடற்படையினருடன் கொழும்பு துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது.

அது தவிர, அமெரிக்க கடற்படையின் ஏழாவது நாசகாரி கப்பல்கள் அணியின் துணைத் தளபதியான கப்டன் சீயான் லூயிஸ்,(*Sean Lewis*), 4 ஆவது மரைன் படைப்பிரிவின் கப்டன் ஷான் மன்ட் ராயர் (*Shan Mandrayar*) உள்ளிட்ட அதிகாரிகளும் இந்த கூட்டுப் பயிற்சிக்காக கொழும்பு வந்திருந்தனர்.

கொழும்பு துறைமுகத்திலும், திருகோணமலை டொக்யார்ட் கடற்படைத் தளத்திலும் இந்த கூட்டுப் பயிற்சி ஆரம்ப நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன. அதையடுத்து, 21ஆம் திகதி தொடக்கம், மன்னாரின் முள்ளிக்கு எத்தில் பெரியளவிலான ஒரு கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. அதில் அமெரிக்க இலங்கை மரைன் படைப்பிரிவுகளுடன் கடற்படையின் ஏனைய சிறப்பு படையணிகளும் பங்கேற்றன.

வழக்கத்தில் இலங்கை கடற்படையினரின் எண்ணிக்கை தான் அதிகமாக இருக்கும். அமெரிக்க படையினரின் எண்ணிக்கை குறைவாக இருக்கும். ஆனால், அதற்கு மாறாக, முள்ளிக் குளத்தில் 150.ற்கும் அதிகமான அமெரிக்க மரைன் படையினரும், 100 வரையான இலங்கை கடற்படையினரும் பயிற்சிகளில் பங்கேற்றிருந்தனர். அமெரிக்க கடற்படையின் அங் கரேஜ் கப்பலில் இருந்த ஈரூடக தரையிறங்கு கலங்கள் இரண்டும், விநியோக வாகனங்களும் கூட இந்தப் பயிற்சிகளில் பங்கெடுத்தன. முள்ளிக்குளம் கடற்கரை மற்றும் காட்டுப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கூட்டுப் பயிற்சிக்கு வழக்கத்துக்கு மாறாக அமெரிக்கா முன்னுரிமை கொடுத்திருந்தது.

அதேவேளை திருகோணமலையிலும் பிறிதொரு அணி மரைன் படைப்பிரிவுடன் கூட்டுப் பயிற்சிகளை மேற்கொண்டது. இந்த நிலையில் நீர்கொழும்பு கடற் பரப்பில், 22, 23ஆம் திகதிகளில் இலங்கை கடற்படையின் கஜபாகு மற்றும் சமுத்ர ஆகிய போர்க்கப்பல்களுடனும் இலங்கை விமானப்படையுடனும் இணைந்து அமெரிக்க கடற்படையின் அங்கரேஜ் கப்பல் கூட்டுப் பயிற்சிகளை முன்னெடுத்தது. இந்தியப் பெருங்கடலில் கடற் கொள்ளை உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்படுதல், மீட்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்தியதாகவே இந்தக் கூட்டுப் பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும், அதற்கு அப்பாற்பட்ட இராணுவ மூலோபாயங்களைக் கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

அமெரிக்க கடற்படைக்கும் இலங்கைக்கும் .டையிலான ஒத்துழைப்பு மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை இந்த கூட்டுப் பயிற்சி உருவாக்கியிருக்கிறது. சீனாவின் 'யுவான் வாங் 5' என்ற விண்வெளி மற்றும் ஏவுகணை வழித்தட கண்காணிப்புக் கப்பல் அம்பாந்தோட்டையில் தரித்துச் சென்ற போது, அதனைக் கடுமையாக எதிர்த்தது அமெரிக்கா.

மீண்டும் அந்தக் கப்பல் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழையக் கூடா தென கட்டளையிட்டதாகவும் தகவல்கள் வெளியாகின. ஆனால் அமெரிக்கா இப்போது இருதரப்பு ஒத்துழைப்பு, கூட்டுப் பயிற்சி என்ற பெயரில் கடல், தரை, வான் என மூன்று வழிகளிலும், இலங்கையில் தன் நடவடிக்கைகளை விரிவுபடுத்தியிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை அமெரிக்கா பயன்படுத்திக் கொள்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம். என்ன தான் சீனா ராஜபக்ஷவினரை கைக்குள் வைத்துக் கொண்டிருந்தாலும், ராஜபக்ஷவினர் பொம்மையாக வைத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்கவை, சீனாவினால் தன் கைக்குள் முழுமையாக வைத்திருக்க முடியவில்லை. ரணில் என்ற ஒற்றை மனிதரை வைத்தே அமெரிக்கா தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறது.



# நாடு கடந்த அரசாங்கம்:- மறுசீரமைக்கப்பட வேண்டும்?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



2009இல், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அழிவுற்றதை தொடர்ந்து புலம்பெயர் சமூகம் தமிழ் தேசிய அரசியலில் பிரதான இடத்தை பெற்றது. இந்த பின்புலத்தில ் தான் 2010இல் நாடுகடந்த அரசாங்கம் என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழ் புலம்பெயர் சமூகமென்று அழைக்கப்படும் மரபிற்கு மாறாக நாடுகடந்த தமிழ் சமூகமென்னும் அடையாளம் முன்னிலைப்படுத்தப்பட்டது.

இந்த அடிப்படையிலேயே நாடு கடந்த அரசாங்கமென்னும் எண்ணக்கரு தோற்றம ் பெற்றது. தமிழ் புலம்பெயர் சமூகமென்று அடையாளப்படுத்தும் போது அது மேற்குலக நாடுகளில் சிதறி வாழும் ஈழத் தமிழ் மக்களை மட்டுமே குறிக்கும் ஆனால் நாடுகடந்த தமிழ் சமூகமென்று அடையாளப்படுத்தும் போது அது உலகின் பல பாகங்களில் சிதறிவாழும் ஈழத் தமிழ் மக்கள் அனைவரையும் உள்வாங்கும். இந்த எண்ணக் கருவே பின்னர் நாடுகடந்த அரசாங்கமென்னும் அமைப்பாக துளிர் விட்டது.

இது அடிப்படையில் தொலை தூர தேசியவாதமென்னும் கருத்தாக்கத்திலிருந்தே வருகின்றது. இந்தக் கருத்தாக்கம் பெனடிக் அன்டர்சனால் 1998இல் முன்வைக்கப்பட்டது. அப்படையில் இது ஒரு குறிப்பிட்ட நாட்டிலிருந்து அரசியல் காரணங்களால் வெளியேறிவர்கள் மற்றும் புலம் பெயர்ந்தவர்கள் எவ்வாறு தேசியத்துடன் தொடர்புபடுகின்றனர் என்பது பற்றியது. தாயக மக்களையும் அந்த தாயக பரப்பிலிருந்து வெளியேறி வாழும் மக்களையும் தொலை தூர தேசியவாதம் இணைக்கின்றது. தாயக பிரதேசத்திலிருந்து வெளியேறி பிறிதொரு நாட்டின் குடியுரிமையை பெற்றிருந்தாலும் கூட தங்களை எல்லை தாண்டிய தாயக குடிமக்களாகவே கருதிக் கொள்கின்றனர். இந்தக்



கருத்தாக்கத்திலிருந்து தான் தொலை தூர தேசியவாதமென்னும் கருத்தாக்கம் உருவானது.

விடுதலைப் புலிகளின் தோல்வியை தொடர்ந்து அதுவரையில் விடுதலைப் புலிகளின் பிரதான ஆதரவுத் தளமாக விருந்த புலம்பெயர் சமூகம் தமிழ் தேசிய அரசியலை தீர்மானிக்கும் முக்கிய தரப்பாக மாறியது. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சி வரையில் ஆயுதப் போராட்டத்திற்கான பிரதான நிதி வழங்குனரென்னும் பாத்திரத்தையே புலம் பெயர் சமூகம் ஆற்றியிருந்தது.

புலிகளின் வீழ்சியை தொடர்ந்தே புலம் பெயர் சமூகம் அரசியல் ரீதியான செயற்பாடு களில் தீவிரம் காண்பித்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் தாயகத்தில் தனி நாட்டுக்கான போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்புலத்தில் புலம் பெயர் சூழலில் தனிநாட்டுக்கான அரசியலை தொடரும் நோக்கில் நாடு கடந்த அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

இது அடிப்படையில் ஈழப் போரின் இறுதிக் கட்டத்தில் விடுதலைப் புலிகளின் சர்வதேச பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட குமரன் பத்மநாதனது (கே.பி) சிந்தனையின் விளைவே நாடுகடந்த அரசாங்கமாகும். எனினும் கே.பி சிறிலங்கா அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து இந்த அமைப்பினை வழி நடத்தும் பொறுப்பு விஸ்வநாதன் உருத்திரகுமாரனின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது.

கடந்த 13 வருடங்களாக உருத்திர குமாரனே இந்த அமைப்பை வழிநடத்தி வருகின்றார். தற்போதுள்ள புலம்பெயர் அமைப்புக்களில் அமெரிக்கா கனடா ஐரோப்பா — என பரந்தளவில் ஈழத் தமிழ் புலம்பெயர் சமூகத்தை இணைக்கும் ஒரேயொரு அமைப்பென்றால் அது நாடு கடந்த அரசாங்கத்தை மட்டுமேயாகும். ஏனைய புலம்பெயர் அமைப்புக்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட நாட்டிற்குள் மட்டுமே மட்டுப்பட்டிருக்கின்றன. ஒரு சில அமைப்புக்கள் சில நாடுகளில்



வலமைப்புக்களை கொண்டிருந்தாலும் கூட அவற்றால் பரவலான கவன ஈர்ப்பை பெற முடியவில்லை. ஆனால் நாடுகடந்த அரசாங்கம் மட்டும் தான் பரவலான மக்களின் கவன ஈர்பை பெற்றிருக்கின்றது. ஆனால் இந்த அமைப்பு உருவாக்கப்பட்ட காலத்தில் பலர் இதனோடு இணைந்திருந்தனர்.

நாடு கடந்த அரசாங்கம் 2010இல் உருவாக்கப்பட்ட போது இதன் ஆலோசகர்களாக பலர் இணைந்திருந்ததாக விக்கிபீடியாவில் பதிவிடப்பட்டிருக்கின்றது. ஆனால் அவர்களில் பலர் இப்போது இந்த அமைப்போடு இல்லை. மேலும் இந்த அமைப்பு மேற்குலக மற்றும் இந்திய ராஜதந்திர சமூகத்தினர் மத்தியிலும் கருத்தில் கொள்ளப்படக் கூடியளவிற்கு வளர்சியடையவில்லை. ஒப்பீட்டடிப்படையில் ஏனைய புலம் பெயர் அமைப்புக்களுக்கிருக்கின்ற அங்கீகாரம் கூடஇ நாடு கடந்த அரசாங்கத்திற்கில்லை. இதற்கு நாடு கடந்த அரசாங்கத்தின் கடடமைப்பிலுள்ள சிக்கல்களே பிரதான காரணமாகும்.

இந்த நிலையில் இந்த அமைப்பின் மறுசீரமைப்பு தொடர்பான கேள்விகள் எழுகின்றன. இந்த மறுசீரமைப்பு இரண்டு அடிப்படையைக் கொண்டதாக இருக்க வேண்டும். ஒன்று கொள்கை நிலைப்பாடு சார்ந்தது அதாவது அரசியல் ரீதியானது. அடுத்தது கட்டமைப்பு சார்ந்தது. கட்டமைப்பு சார்ந்த விடயங்களுக்குள் நான் அதிகம் செல்லவில்லை. ஏனெனில் இது அந்தச் சூழலிலுள்ளவர்கள் கலந்துரையாடி நடைமுறைப் படுத்தப்பட வேண்டி ஒன்றாகும். ஆனால் இந்த அமைப்புக்குள் உள் முரண்பாடுகள் இருப்பது தெளிவாகவே தெரிகின்றது.

உள்முரண்பாடுகளை பூசி மெழுகிக் கொண்டு செல்வதால் ஒரு போதும் பிரச்சினைகளை கையாள முடியாது. அவை முளையிலேயே கண்டறிந்து சரிசெய்யப்பட வேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள்ளிருந்த முரண்பாடுகளை சரியான முறையில் கையாண்டிருந்தால் இன்று தாயக தமிழ் தேசிய அரசியல் நெருக்கடிகளுக்குள் சிக்கியிருக்காது. பிளவுகளும் ஏற்பட்டிருக்காது.

இந்தக் கட்டுரையாளர் அதிகம் அரசியல் ரீதியான மறுசீரமைப்பு தொடர்பிலேயே கவனம் செலுத்துகின்றார். புலம்பெயர் சூழலில் இயங்கும் அமைப்புக்கள் தொலை தூர தேசியவாதமென்னும் கருத்தாக்கத்தின் கீழ் தாயகத்தோடு இணைகின்ற போது தாயக அரசியல் சூழலையும் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும்கருத்தில் கொண்டே தீர்மானங்களை எடுக்க வேண்டும். போர் முடிவுற்றதை தொடர்ந்து அவசர அவசரமாக உரையாடப்பட்டே நாடு கடந்த அரசாங்கம் உருவாக்கப்பட்டது. அன்றைய சூழலில் ஆழமான பரிசீலனைகள் இருந்திருக்க வாய்ப்பில்லை.

அதே வேளை விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியை தொடர்ந்து சுயவிமர்சனம் சார்ந்த உரையாடல்களிலும் எவரும் ஈடுபடவில்லை. முக்கியமாக இந்தியாவின் வகிபாகம் தொடர்பில் தெளிவான புரிதல்கள் புலம்பெயர் சமூகத்திடம் இருந்திருக்கவில்லை. வெறுமனே மேற்குல நாடுகளில் சத்தம் போடுவதன் மூலம் விடயங்களை கையாண்டு விட முடியுமென்னும் மேலோட்டமானதொரு பார்வையுடனேயே புலம்பெயர் சமூக அரசியல் செயற்பாடுகள் திட்டமிடப் பட்டன. ஆனால் கடந்த பதின்மூன்று வருடகால அனுபவங்கள் பிராந்திய அரசியல் சூழலை புறம்தள்ளி ஒரு போதுமே செயற்பட முடியாதென்னும் அனுபவத்தை நமக்கு வழங்கியிருக்கின்றது. உலகம் ஒழுங்கு பல் துருவ நிலையிருக்கின்ற போது மேற்குலகில் இங்குவதன் மூலம் விடயங்களை கையாள முடியாது. அது ஒரு துருப்புச் சீட்டாக இருக்கலாம் ஆனால் அதனைக் கொண்டு மட்டும் நகர முடியாது. இது நமது விருப்பு வெறுப்புக்கள் சார்ந்த விடயமல்ல. இது தான் உலக அரசியல் யதார்த்தமாகும். இந்த பின்புலத்தில் சிந்தித்தால் நாடு கடந்த அரசாங்கத்தை அரசியல்ரீதியில் மறுசீரமைக்க வேண்டிய கட்டாயமுண்டு. ஏனெனில் எவ்வாறு தாயக தமிழ் தேசிய அரசியல் சிதைவுற்றிருக்கின்றதோ அவ்வாறானதொரு நிலையில் தான் புலம்பெயர் யெற்பாடுகளும் அமைந்திருக்கின்றன.

முதலில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்னும் பெயர் மாற்றியமைக்கப்பட வேண்டும். தமிழர்களுக்கான நாடுகடந்த அரசாங்கமென்று பெயரை மாற்றியமைக்கலாம். அதாவது தனிநாட்டுக்கான நிலைப்பாடு கைவிடப்பட வேண்டும். ஏனெனில் தாயகத்தில் அவ்வாறான நிலைப்பாட்டுக்கான அரசியல் சூழல் முற்றிலும் இல்லை. அத்துடன் அது பிராந்திய மற்றும் சர்வதேச அரசியல் பின்புலத்தில் நோக்கினால் முற்றிலும் ஒரு கற்பனாவாதம் மட்டுமே.

முக்கியமாக பிராந்திய அரசியல் சூழலுக்கு அது ஏற்புடைய வாதமல்ல. எனவே அதற்கு பதிலாக உள்ளக சுயநிர்ணய உரிமையென்னும் நிலைப்பாட்டை கைக் கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு செல்லும் போது உள்ளக சுயநிர்ணய உரிமையென்னும் நிலைப்பாட்டுடன் தான் சென்றிருந்தனர். நாடு கடந்த அரசாங்கத்திற்கு ஒரு தாராளவாத வெளித் தோற்றத்தை காண்பிக்க வேண்டும். அப்போது தான் மேற்குலக ராஜதந்திர சமூகத்தோடு ஊடாடும் வாய்ப்பை பெறலாம். அங்கீகாரமே அரசியல் லொபிக்கான அடிப்படையாகும். விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு இராணுவ கட்டமைப்பாக இருந்த போதுஇ பயன்படுத்திய அடையாளங்களை போருக்கு பின்னரான ஜனநாயக அரசியல் இயக்கத்திற்கு பன்படுத்த முடியாது. அது அடிப்படையிலேயே தவறானது.

கடந்த பதின்மூன்று வருடகால அரசியல் நகர்வுகளை உற்று நோக்கினால் நாம் ஒரு விடயத்தை காணலாம். அதாவது அரசியல் பலமில்லாமல் நாம் ஒரு அடி கூட முன்நோக்கி பயணிக்க முடியாது. இந்த பின்புலத்தில் நோக்கினால் பதின்மூன்று வருடகால அரசியல் முன்னெடுப்புக்களானது வெறுமனே வெளியாரின் கருணைக்காக காத்திருந்த காலமாகவே கழிந்திருக்கின்றது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் மீதான நம்பிக்கை அமெரிக்க அழுத்தங்களின் மீதான நம்பிக்கை மேற்குலக நாடுகளின் மீதான நம்பிக்கை இப்படித் தான் கடந்த பதின்மூன்று வருடங்கள் நகர்ந்திருக்கின்றன. இவ்வாறானதொரு சூழலில் தாயகத்திலுள்ள மக்களால் முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. இந்தக் காலத்தில் இடம் பெற்ற விடயங்களை திரும்பிப் பார்த்தால் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைகள் சில இராணுவ அதிகாரிகள் மீது அமெரிக்காவினால் விதிக்கப்பட்டிருக்கும் பயணத் தடைகள் தற்போது கனடிய அரசு ராஜபக்சக்கள் மீது விதித்திருக்கும் தடைகள் போன்ற சில விடயங்கள் மட்டுமே நமக்கு முன்னாலிருக்கின்றன. ஆனால் தாயக மக்களுக்கான அரசியல் தீர்வில் ஒரு துரும்பளவு கூட நம்மால் முன்னநகர முடியவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் தான் மீளவும் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பேசப்படுகின்றது. இலங்கைத்தீவு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்ற சூழலில் தான் மீளவும் அரசியல் தீர்வு விடயம் பேசுபொருளாகியிருக்கின்றது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அங்கமான 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்னும் வாதம் மேலேழுந்திருக்கின்றது.

பிராந்திய சக்தியான இந்தியா தொடர்ந்தும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையான 13வது திருத்தச் சட்டம் தொடர்பில் மட்டுமே வலியுறுத்தி வருகின்ற நிலையில் அதனை ஓரமாக வைத்துவிட்டு ஈழத் தமிழர்களால் நகர முடியாது. இது தொடர்பில் ஈழத் தமிழர் புலம்பெயர் அமைப்புக்கள் கண்களை மூடிக் கொண்டிருக்கக் கூடாது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி. ஜெயசங்கர் இந்தியாவின் நிலைப்பாட்டை அழுத்தம் திருத்தமாக தெரிவித்துச் சென்றிருக்கின்றார். இதன் பின்னரும் நாங்கள் இந்தியாவிடம் வலியுறுத்துகின்றோம் என்றெல்லாம் பேசுவதும் விவாதிப்பதும் பயனற்றது. இந்தக் கட்டுரையாளர் இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்பங்களில் இந்த விடயம் தொடர்பில் வலியுறுத்தியிருக்கின்றார்.(22ம்பக்கம்)

# 13க்குள் தீர்வு வருமா?

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக கொழும்பில் இருந்து
– பார்த்தீபன் –

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை விமர்சையாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்து வரும் நிலையில், தமிழ்த் தரப்பினர் இதனை கரிநாளாக அறிவித்திருக்கின்றார்கள். யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் வடக்கிலிருந்து மட்டக்களப்பை நோக்கி பேரணி ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் செய்திருக்கின்றார்கள்.

இந்தப் பின்னணியில், பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்தி வைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர் வரும் 8ஆம் திகதி புதன்கிழமை சம்பிரதாயபூர்வமாக புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்துவைக்கவுள்ளார். இதன் போது அவர் நிகழ்த்தப் போகும் உரை முக்கியமானதாக இருக்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்பது தான் அவரது நிலைப்பாடாக இருக்கும் எனத் தெரிகின்றது. கடந்த வாரம் கருத்து வெளியிட்ட அவர், 13க்கு எதிராக தென்னிலங்கையில் சிங்கள தேசியவாதிகளால் முன்னெடுக்கப்படும் பிரச்சாரங்களுக்கு கடுமையான பதிலடியைக் கொடுத்தார். 13 அரசியலமைப்புக்கு உட்பட்ட ஒன்று என்று தெரிவித்த ரணில், அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி என்ற முறையில் தனக்கு இருப்பதாகவும் சுட்டிக் காட்டினார். இதனை யாராவது தேவையற்றது எனக் கருதினால், அரசியலமைப்புக்கு மற்றொரு திருத்தத்தைக் கொண்டு வந்து அதனை நீக்கி விடலாம் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

13ஐ விமர்சிப்பவர்கள் என்ன செய்யலாம் என்பதற்கான வழிகளையும் அவர் காட்டியிருக்கின்றார். 13ஆவது திருத்தம் இலங்கை இந்திய உடன்படிக்கையின் மூலமாகக் கொண்டு வரப்பட்ட ஒன்றாக இருப்பதால், அதனை இல்லாதொழிப்பதற்கான முயற்சிகளை எந்தவொரு கட்சியும் துணிந்து முன்னெடுக்காது என்பது ரணிலுக்குத் தெரியும்.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, சரத் வீரசேகர மற்றும் பிக்குமார் சிலரும் தமது அரசியலைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இவ்வாறான கருத்துக்களை முன் வைத்தாலும், அதனை செயற்படுத்துவதற்கு முன்வருவார்கள் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல.

மாகாண சபை முறையை அண்மைக்காலம் வரை கடுமையாக எதிர்த்து வந்த ஜே.வி.பி.யும் தனது நிலைப்பாட்டை இப்போது மாற்றிக் கொண்டிருக்கின்றது. இதன் மூலமாக தமக்கு தீர்வு கிடைக்கும் என தமிழ் மக்கள் நம்புவதால் இதனை தான் எதிர்க்கப் போவதில்லை என ஜே.வி.பி. தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்திருக்கின்றார். இது தமிழ் மக்களுடைய வாக்குகளைக் கவர்வதற்கான ஒரு உபாயமாகவும் இருக்கலாம். அல்லது இந்தியாவுடன் அவர்களுடைய உறவுகள் வலுப்பெற்று வருலதன் பிரதிபலிப்பாகவும் இருக்கலாம்.

அதேவேளையில், இந்தியாவும் இலங்கை மீதான தன்னுடைய பிடியை உறுதியாக வைத்துக் கொள்வதற்கு 13 ஆவது திருத்தத்தைத்தான் நம்பியிருக்கின்றது. இரு வாரங்களுக்கு முன்னதாக கொழும்பு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஜனாதிபதியுடனான சந்திப்பின் போதும் இதனை வலியுறுத்தியிருந்தார். அதேவேளையில் ஜெனிவாவில் புதன்கிழமை ஆரம்பமான நாடுகளில் காலக்கிரம ஆய்வில் இலங்கை தொடர்பாக உரையாற்றிய இந்தியப் பிரதிநிதியும், 13 முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதைத்தான் பிரதானமாக வலியுறுத்தியிருந்தார். ஜெனிவாவில் இந்தியா தொடர்ச்சியாக இந்தக் கருத்தைத்தான் முன் வைத்து வருகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் அரசியலமைப்பில் 13 இருப்பதால் அதனை



முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமாக மாகாண சபைகளுக்கு அதிகளவு அதிகாரங்கள் கிடைக்கும். வடக்கு – கிழக்கில் எதிர்கொள்ளப்படும் காணி மற்றும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளுக்கு இதன்மூலமாகத் தான் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கின்றது. கொழும்பில் ஜெய்சங்கரை சந்தித்த தமிழ்க் கட்சி ஒன்றின் பிரதிநிதி, சமஸ்டி தான் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என்பதை வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த ஜெய்சங்கர், அதனை மறுதலிக்கவில்லை. ஆனால், அரசியலமைப்பில் இருக்கின்ற 13 ஐயே அரசாங்கம் நடைமுறைப்படுத்தாமல் இருக்கும் நிலையில், சமஸ்டியைத் தருவார்கள் என எதிர்பார்க்க முடியுமா? என்ற பதில் கேள்வியையும் கேட்டிருந்தார்.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரையில், 13ஐ இறுதித் தீர்வாக ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் தயாராகவில்லை. அது ஒற்றையாட்சிக்குள் தீர்வைத் தருவதாக இருப்பதால், பகிரப்படும் அதிகாரங்கள் மீண்டும் பறிக்கப்பட்டு விடலாம் என்ற அச்சத்தை அவர்கள் வெளிப்படுத்துகின்றார்கள். ஏற்கனவே இவ்வாறு பல அதிகாரங்கள் மாகாண சபைகளிடமிருந்து பல்வேறு வழிகளில் பறிக்கப்பட்டது.

குறிப்பாக திவினுகம சட்டமூலத்தின் மூலமாக மாகாண சபைகளின் அதிகாரங்கள் பல பறிக்கப்பட்டன. இந்த நிலையில் தான் சமஸ்டி என்ற கோரிக்கை தமிழ்த் தரப்பினரால் முன் வைக்கப்படுகின்றது. 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதே ஆபத்தானது எனக்கூறும் சிங்கள தேசியவாதிகள் சமஸ்டி என்பதை ஒருபோதும் ஏற்க மாட்டார்கள். சிங்களத் தலைவர்களும் தமது பதவியை பணயம் வைத்து அதற்குத் துணிய மாட்டார்கள்.

இந்த நிலையில் தான் 13 குறித்த கோரிக்கை தமிழ்த் தரப்பினரால் முன் வைக்கப்படுகின்றது. கஜேந்திரகுமாரின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டும் இதனை எதிர்க்கின்றது. 13 ஐ ஏற்றுக் கொள்வது என்பது சமஸ்டி என்ற கோரிக்கையை குழி தோண்டிப் புதைத்து விடுவதாகி விடும் என்ற அச்சம் அவர்களால் வெளியிடப்படுகின்றது.

அத்துடன் 13ஐ ஏற்றுக் கொள்பவர்களை துரோகிகள் என்றும் அவர்கள் முத்திரை குத்துகின்றார்கள். அதனால் தான் ஏனைய தமிழ்க் கட்சிகள் 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்று கேட்பதற்குப் பதிலாக 'அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள்' என்று தமது கோரிக்கையை மாற்றியிருக்கின்றார்கள்.

இந்த நிலையில் சுதந்திர தினத்துக்கு முன்னதாக தீர்வைக் காணப் போதாக கடந்த வருட இறுதியில் அறிவித்த ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்தி வைத்து பெப்ரவரி 8 ஆம் திகதி புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்துவைக்கின்றார். அதில் அவர் நிகழ்த்தப் போகும் உரை முக்கியமானதாக இருக்கும் என எதிர் பார்க்கப்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன. இந்திய வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தைத் தொடர்ந்து அமெரிக்க இராஜாங்கச் செயலாளரின் விஜயம் இடம் பெற்றது. இருவருமே அரசியல் தீர்வு குறித்து அதிகளவுக்கு அழுத்தம் கொடுத்திருக்கின்றார்கள்.

அதனை விட, ஜெனிவாவில் இவ்வாரம் இடம்பெற்ற காலக்கிரம ஆய்வில் இலங்கை தொடர்பான விமர்சனங்களே அதிகமாக இருந்தது. இந்தப் பின்னணியில் ஐ.எம்.எப். மூலமாக கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட உதவிகள் தாமதமாகின்றது. ஆக, சர்வதேச சமூகத்தை ஏதோ ஒருவகையில் திருப்திப்படுத்த வேண்டும் என்ற தேவை ரணிலுக்கு ஏற்பட்டுள்ளது.

13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துகின்றோம் என்று அறிவிப்பதன் மூலமாக மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை. அதற்கான களம் மாகாண சபைகள் தான். மாகாண சபைகள் செயற்படாத நிலையில், ஆளுநரின் கரங்களில் மாகாண சபைகள் இருக்கும் நிலையில், 13ஐ நடைமுறைப்படுத்துவது என்பது அர்த்தமுள்ளதாக இருக்காது. ஆக, மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். இந்திய வெளிவிவகார அமைச்சரும் அதற்கான அழுத்தங்களைக் கொடுத்திருக்கின்றார்.

இதனால் 13 குறித்த முக்கியமான அறிவித்தல் ஒன்றை பெப்ரவரி 8 ஆம் திகதி ஜனாதிபதி வெளியிடுவாரா? அவ்வாறான அறிவித்தல் ஒன்றை அவர் வெளியிட்டால், சிங்கள தேசத்தின் பிரதிபலிப்பு எவ்வாறானதாக இருக்கும்? உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை மார்ச் 9 ஆம் திகதி நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ள நிலையில், ரணிலின் நகர்வுகள் எவ்வாறானதாக இருக்கும்? தேர்தலை நோக்கமாகக் கொண்டு உள்நாட்டு அரசியலை மனதில் வைத்து அவர் செயற்படப் போகின்றாரா? அல்லது சர்வதேசத்தை திருப்திப்படுத்தும் வகையில் அவர் காய்களை நகர்த்துவாரா?

இவை தான் கொழும்பு அரசியலில் இப்போது எழும் கேள்விகளாகும்.!

நடமாடும் மருத்துவ தாதிய சேவை
Mobile Medical Nursing

யாழ். மக்களின் வீட்டிற்கே வரும் எமது சேவை

இலங்கை மருத்துவ சபையின் (SLMC) இல் பதிவுபெற்ற
அரச வைத்தியசாலையில் பல வருட அனுபவம்
வாய்ந்தவர்களின் சேவை.

- வயோதிபர்கள்
- படுக்கையில் இருக்கும் நோயாளிகள்
- வயோதிபர் இல்லங்கள்
- வைத்தியசாலை செல்ல உதவியற்றவர்கள்
- வைத்திய சாலை சிகிச்சையின் பின் தொடர்சியான தேவைக்கும்
- வெளிநாடுகளில் வசிப்போர் தமது உறவுகளின் தேவைக்கும் எம்முடன் தொர்புகொள்ளவும்.

01. குருதி அமுக்கம் அளவீடும் அட்டவணைப் படுத்தலும் (Blood Pressure)
02. ஊசி போடுதல் (Injection)
03. குருதியில் சீனியின் அளவு பரிசோதனை (Blood Sugar test)
04. காயங்களிற்கு மருந்துகட்டல் (Wound Dressing)
05. சத்திரசிகிச்சை தையல் அகற்றல் (Suture Removal)
06. படுக்கை புண்ணிற்கான விசேட பராமரிப்பு (Special Care for Bed Sore)
07. குருதி / சலம் / சளி பரிசோதனைகள் (Blood / Urine / Sputum Test)
08. முட்டு / ஆஸ்மா நோயாளர்களுக்கான பராமரிப்பு (Nebulizing)
09. மாதாந்தம் சலக்குழாய் மாற்றல் (Urinary Catheter Change)
10. குளுக்கோஸ் / சேலைன் ஏற்றல் (I.V.fluids)
11. பாரிசவாதம் / சத்திர சிகிச்சையின் பின்னரான உடல் அப்பியாசம் (Phisio therapy)
12. பொருத்தமான விசேட வைத்திய நிபுணர் ஒழுங்கமைத்தல்
13. அம்புலன்ஸ் சேவை வழங்குதல்

மற்றும் உங்கள் அனைத்து மருத்துவ தாதிய தேவைகளுக்கும் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி: 077 007 0646 - Viber / Whatsapp
மின்னஞ்சல்: - mmnservicej@gmail.com

# 13 பற்றிய யதார்த்தம்

முப்பத்தி ஆறு வருடங்களுக்குப் பிறகு 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தயார் என்று இலங்கை ஜனாதிபதி ஒருவர் (ரணில் விக்கிரமசிங்க) பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்.

இதைக் குறித்த உரையாடல்கள் தீவிரமடைந்துள்ளன. மாகாணசபைகளுக்கான அதிகாரத்தை வழங்கக் கூடாது. அப்படி வழங்கினால் அதைக் கடுமையாக எதிர்ப்போம் என்று கூறுகிறது பிக்குகள் முன்னணி. இதே எதிர்ப்பை வெளியிட்டுள்ளன விமல் வீரவன்ச போன்றோரின் சிறிய சில இனவாதக் கட்சிகள்.

இதற்கு நிகராக மறுமுனையில் மாகாணசபைகளுக்காகவா எங்களுடைய போராட்டமெல்லாம்? என்று கேட்கின்றன அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உள்ளிட்ட சில தமிழ் அரசியற் தரப்புகள். கூடவே புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற தமிழ் அமைப்பினர்களிற் சிலரும் மேல்நிலை தமிழ் அரசியல் அபிப்பிராயவாதிகளும் இதே கேள்வியை எழுப்பியுள்ளனர்.

இவர்களுடைய கற்பனைக்கு எல்லையே இல்லை. மாகாணசபையைத் தவிர்த்து வடக்குக் கிழக்கு மாகாணங்களை அல்லது இவர்கள் சொல்வதைப் போல தமிழர் தாயகத்தை எந்த அடிப்படையில் இணைத்து உரிமைகளைப் பெறுவது? அதில் முஸ்லிம் மக்களுக்கான இடமென்ன? அதற்கு அவர்களுடைய சம்மதம் உண்டா? நடைமுறைச் சாத்தியமான திட்டமும் தீர்வும் என்ன? என்பவை குறித்தெல்லாம் இந்தத் தரப்புகள் ஒரு போதுமே தெளிவாகப் பேசுவதில்லை. பதிலாக அதி தீவிர அரசியற் பிரகடனத்தை (தமிழீழம்) மட்டும் வசதியான நிலையில் இருந்து கொண்டு திருவாய் மலர்ந்தருள்கின்றன.

ஆக தமிழ், சிங்களத் தரப்பிலுள்ள மிகச் சிறிய ஆதரவுத் தளத்தைக் கொண்டுள்ள சிறிய தரப்பினரே மாகாணசபை முறைமையை அதற்கான அதிகாரங்களைக் குறித்து தமது எதிர்ப்பையும் அதிருப்தியையும் வெளியிட்டுள்ளன. இவை எப்போதும் இப்படித்தான். நடைமுறைச் சாத்தியமாகச் சிந்திப்பதில்லை. பிரச்சினைகள் தீர்வதை விரும்புவதில்லை. பிரச்சினைகளை வளர்த்தே தம்மை வாழ வைக்கின்றன.

ஆனால், ஏனைய பெருங்கட்சிகள் அனைத்தும் இதற்கு ஆதரவாகவே உள்ளன.

இதேவேளை ஜனாதிபதியின் இந்த அறிவிப்பைக் குறித்து இதுவரையில் முஸ்லிம் தரப்புகள் ஏதும் சொல்லவில்லை என்பது கவனத்திற்குரியது. அவை என்ன நிலைப்பாட்டை எடுக்கவுள்ள என்பது கேள்வியே!

இவ்வளவு காலமும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏகப்பட்ட பிரச்சினைகள் இருந்தன. இலங்கை இந்திய உடன்படிக்கையில் கூறப்பட்ட சில அதிகாரங்களை 1990 இல் அன்றைய ஜனாதிபதி ஆர்.பிரேமதாச தந்திரோபாயமாக வெட்டியெடுத்திருந்தார். இதற்கு அவர் அப்பொழுது விடுதலைப் புலிகளையும் புலிகளுக்கு இணக்கமாக இருந்த ஈரோஸ் இயக்கத்தையும் பயன்படுத்தினார். மாகாணசபையைப் பலவீனப்படுத்தி, அதில் அப்பொழுது அதிகாரத்தில் இருந்த ஈ.பி.ஆர். எல்.எவ்வை அப்புறப்படுத்துவதற்கு புலிகள் விரும்பினர். இதை தமக்கான வாய்ப்பாகப் பயன்படுத்திப் பிரேமதாச வெற்றியடைந்தார்.

இதனால் தான் 1990இல் வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையை கலைத்தார் அ.வரதராஜாபெருமாள். இதனால் தான் மாகாணசபை முறைமை தொடர்ந்தும் நம்பிக்கையீனமாகவும் சர்ச்சைக்குரியதாகவும் நோக்கப்படுகிறது.

இதை மேலும் உறுதிப்படுத்தும் விதமாக அதற்குப் பிறகு ஆட்சியிலிருந்த அரசாங்கங்களும் அதிகாரத்திலிருந்த ஜனாதிபதிகளும் மாகாணசபையின் அதிகாரங்களை வழங்காமல் நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்தே வந்தனர். போதாக்குறைக்கு ஜே.வி.பியின் மூலமாக இணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபையை சட்டரீதியாகப் பிரித்தனர்.

ஆனாலும் 2009இல் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பிறகு உருவான அரசியற் சூழலில் மாகாண சபையைத் தவிர, வேறு உடனடி மார்க்கம் ஏதுமில்லை என்ற யதார்த்தம் உருவானது. இதனால்



தான் மாகாண சபைகளுக்கான அதிகாரத்தை முழுமையாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. இதை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைத் தவிர்ந்த ஏனைய தமிழ்க்கட்சிகள் அனைத்தும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. கடந்த ஆண்டு 1ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கேட்டு ஆறு தமிழ்க் கட்சிகள் இந்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருந்தன. இதை விட தனித்தனியாகவும் ஏனைய தமிழ்க்கட்சிகள் இதை இந்தியாவிடமும் இலங்கை அரசிடத்திலும் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில் தான் இந்தியாவும் இந்தியாவின் வலியுறுத்தலின் அடிப்படையில் ஐ.நாவும் இவற்றின் அடிப்படையில் இப்பொழுது ரணில் விக்கிரமசிங்கவும் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதைப் பற்றிப் பேசும் நிலை உருவாகியுள்ளது.

அதாவது 13ஐ நடைமுறைப்படுத்துவதற்கு மிகச் சாதகமான ஒரு சூழல் கனிந்து வந்துள்ளது என்பதை மனதிற் கொண்டே ரணில் விக்கிரமசிங்க கடந்த நவம்பரில் வரவு செலவுத்திட்ட உரையின் போது இனப்பிரச்சினைக்கு ஓராண்டுக்குள் தீர்வு காணப்படும் என்று நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இதில் அவர் ஓரளவுக்கு உறுதியாக இருப்பதாகவும் தெரிகிறது. அவருடைய நோக்கில் (சிங்களநோக்கு நிலையில்) இதற்கு மேலான அதிகாரத்தை வழங்குவதற்குப் பதிலாக 13 உடன் நின்று விடலாம் என்றும் யோசித்திருக்கக் கூடும். இதை விடவும் அதிகமான அனுகூலங்களை ரணில் விக்கிரமசிங்க தன்னுடைய அரசியல் நலனுக்காகவும் சிங்கள மேலாதிக்க நலனுக்காகவும் சிந்திக்கலாம்.

ஆனால், தமிழ் பேசும் சமூகங்களைப் பொறுத்து இதை அவை எப்படி அணுகப் போகின்றன?

ஏனெனில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெயசங்கரும் 13ஐப் பற்றியே பேசியிருக்கிறார். மட்டுமல்ல, இந்த விடயம் உள்பட ஏனைய விடயங்களைப் பற்றிப் பேசுவதற்காகவும் ரணில் விக்கிரமசிங்கவை அழைத்திருக்கிறது இந்தியா. ஆக மொத்தத்தில் இப்பொழுது 13ஐ நடைமுறைப்படுத்துவதே முதன்மையான விடயமாக மாறியுள்ளது. ஆனால், இதற்கு தமிழ்த் தரப்பில் இன்னொரு சிக்கலும் ஏற்பட்டுள்ளது. உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தல் அறிவிப்பினால் ஏற்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெளிப்படையான விரிசல் 13 நடைமுறைப்படுத்தும் நடவடிக்கை மற்றும் அதற்கான பேச்சுகளைப் பாதிக்கக் கூடிய நிலையே ஏற்பட்டுள்ளது.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்க தான் அதிகாரத்துக்கு வந்த பின்னர் பல விதமான நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்தி வருகிறார். சுதந்திர தினத்தையொட்டி இன்னொரு தொகுதி அரசியற் கைதிகள் விடுவிக்கப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான அறிவிப்பை நீதிஅமைச்சர் விஜேதாச ராஜபக்ஸ அறிவிப்பார் என்று தெரிகிறது. கூடவே வலி வடக்கில் மேலும் ஒருதொகுதி நிலத்தை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

ஆனாலும் தமிழ்த் தேசியத் தரப்புகள் இதையிட்டெல்லாம் திருப்திப்பட்ட மாதிரித் தெரியவில்லை.

இறுதியில் 13 உம் இல்லை. சமஸ்டியும் இல்லை. தமிழீழமும் இல்லை என்ற நிலை தான் வருமோ தெரியாது. ஏனென்றால் 1987 இல் 13ஐ வலுப்படுத்தக் கூடிய சூழல் இருந்தது. தமிழ்த் தரப்பில் காணப்பட்ட பிளவே (புலிகள் — ஈ.பி.ஆர்.எல்.எவ் இந்திய அரசு) அது பலவீனமாகக் காரணமாகியது. இப்பொழுது அதே 13ஐ பலப்படுத்துவது, நடைமுறைப்படுத்துவது என்று பேசுவதற்கே 36 ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கின்றன. இடைப்பட்ட காலப்பகுதியில் கொடுக்கப்பட்ட விலை இழப்புகள் கொஞ்சமல்ல.


கட்டுரையாளர்
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -




இந்த 36 ஆண்டு காலத்திலும் தமிழர்கள் பெற்றது எதுவும் இல்லை. இந்த இடைப்பட்ட காலத்தில் செய்த தியாகங்கள், நடத்திய போராட்டங்கள், சந்தித்த இழப்புகள் எல்லாவற்றுக்குப் பின்னும் 13 ஐ நடைமுறைப்படுத்துவது அமுலாக்குவது என்றளவில் தான் பேச்சுகள் உள்ளன.

இதற்கு அப்பால் செல்வதற்கு இந்தியாவோ பிற சர்வதேச சமூகமோ சிந்திப்பதாகவும் தெரியவில்லை.

இந்த நிலையில் சோதனையாகவும் சாதனையாகவும் 13 வந்து முன்னே நிற்கிறது. எண் சோதிடத்தின்படி 13 என்பது அதிர்ஸ்டமற்ற எண் என்று சொல்வார் கள்.


தமிழர்களுக்கும் இலங்கைக்கும் அது என்ன மாதிரியான எண் என்பது வரலாற்றின் முடிவாகும். அப்படியான அதற்கான ஒரு வரலாற்றுத் தருணம் இப்பொழுது வந்துள்ளது.

யதார்த்தவாதிகள் 13 வரவேற்கிறார்கள்.

கற்பனாவாதிகள் எதிர்க்கிறார்கள். இனவாதிகள் எதிர்க்கிறார்கள். நியாயவாதிகள் ஆதரிக்கிறார்கள்.

இப்படியான ஒரு விசித்திரத்தின் முன்னே நிற்கும் 13ஐப் பற்றிய உண்மையான நிலவரத்தை அடுத்து வரும் மாதங்களில் துலக்கமாக — நிர்ணயமாக அறிந்து கொள்ளலாம்.

ஆம், தமிழ் பேசும் மக்களுடைய எதிர் காலத்தையும் தான்.

# தமிழகத்தில் ஈரோடுவில் நடக்கும் இடைத்தேர்தலில் இரண்டு பட்டுள்ள அ.தி.மு.க.வின் பலப்பரீட்சை

தமிழகத்தில் ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதிக்கு இடைத் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. இந்த இடைத் தேர்தலில் ஆளும் திமுக கூட்டணி சார்பில் காங்கிரஸ் வேட்பாளராக ஈவிகேஎஸ் இளங்கோவன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். அந்தத் தேர்தலுக்காக, அ.தி.மு.க. சார்பில் 111பேர் இடம் பெற்றுள்ள மிகப்பெரிய பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தலைமையிலான இக்குழுவினரை, இடைத்தேர்தல் பணியில் களமிறக்கவும், ஜெயலலிதா பாணியில் ஆளும் கட்சிக்கு எதிராக அதிரடி காட்டவும், பழனிசாமி திட்டமிட்டுள்ளார். இதன் வாயிலாக விமர்சனங்களை முறியடித்து, கட்சியை தன் வசமாக்கவும் மும்முரம் காட்டி வருகிறார்.

ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதிக்கு, பெப்ரவரி 27ல் இடைத்தேர்தல் நடக்கிறது. இந்ததேர்தலானது ஆளுங் கட்சியை விட, எதிர்க்கட்சிகளுக்கு அக்னி பரீட்சையாக அமைந்து உள்ளது.

காரணம், பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க., பிளவுபட்டுள்ளது. பழனிசாமி – பன்னீர்செல்வம் தலைமையில், அக்கட்சியினர் தனித்தனியே இயங்குகின்றனர்.

வேட்பாளருக்கு சின்னம் கோரும் படிவத்தில், இருவரும் கையெழுத்திட்டால் தான், இரட்டை இலை சின்னத்தை பெற முடியும் என்ற நிலை உள்ளது. இது குறித்து கவலைப் படாமல், இடைத்தேர்தலில் போட்டியிட்டு, கட்சி தன் பக்கம் உள்ளதை நிரூபிக்க, பழனிசாமி முடிவு செய்துள்ளார்.

அதனால், கடந்த சட்டசபை தேர்தலில், அ.தி.மு.க., கூட்டணி சார்பில் போட்டியிட்ட த.மா.கா..விடம் பேசி, இம்முறை அ.தி.மு.க., போட்டியிடும் என்று அறிவித்தார்.

அதற்கு போட்டியாக பன்னீர்செல்வமும், 'அ.தி.மு.க., சார்பில், நாங்கள் போட்டியிடுவோம். பா.ஜ., போட்டியிட்டால், அதற்கு ஆதரவு அளிப்போம்' என்று கூறினார். அதைத் தொடர்ந்து இரு தரப்பினரும், கூட்டணி கட்சி தலைவர்களை சந்தித்து ஆதரவு கோரினர். யாருக்கு ஆதரவு அளிப்பது என தெரியாமல், கூட்டணி கட்சியான பா.ஜ.க திணறி வருகிறது.

இந்நிலையில், ஜெயலலிதா பாணியில் ஆளும் கட்சிக்கு எதிராக அதிரடி காட்டவும், தனக்கு எதிரான விமர்சனங்களை முறியடித்து கட்சியை வசமாக்கவும், பழனிசாமி காய்களை நகர்த்தி வருகிறார்.

ஜெயலலிதா ஆளும் கட்சியாக இருந்த போதும், எதிர்க்கட்சியாக இருந்த போதும், இடைத்தேர்தல் அறிவிக்கப் பட்டால், அனைத்து கட்சிகளுக்கும் முன்பாக, முக்கிய நிர்வாகிகள் அனைவரையும், தேர்தல் பொறுப்பாளர்களாக அறிவிப்பார்.

ஒவ்வொருவரும் குறிப்பிட்ட ஓட்டுச் சாவடிகளுக்கு பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுவர். அவர்களுக்கு, கீழ் மற்ற நிர்வாகிகள் நியமிக்கப்படுவர். அவர்கள் அந்தந்த ஓட்டுச்சாவடிகளில் பதிவாகும் ஓட்டுகளில், அதிக ஓட்டுகளை அ.தி.மு.க., வேட்பாளருக்கு பெற்றுத் தர வேண்டும். தவறினால், கட்சிப் பதவியை இழக்க வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே, பொறுப்பாளர்கள் அனைவரும் அதிக ஓட்டுகளை பெற, அனைத்து வழிகளையும் கையாளுவர்.

அதே பாணியை பின்பற்றி, ஈரோடு புறநகர் மேற்கு மாவட்ட செயலரும், முன்னாள் அமைச்சருமான செங்கோட்டையன் தலைமையில், 111 பேர் அடங்கிய தேர்தல் பணிக்குழுவை பழனிசாமி அறிவித்துள்ளார்.

இக்குழுவில், கே.பி.முனுசாமி, விஸ்வநாதன், தங்கமணி, வேலுமணி உட்பட, 51 முன்னாள் அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர். இது தவிர,

அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன், முன்னாள் மத்தியஅமைச்சர் தம்பிதுரை, மாவட்டசெயலர்கள், எம்.எல்.ஏ.,க்கள் ஆகியோரும் இடம் பெறுகின்றனர்.

அனைவரும் கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக, தேர்தல் பணிகளை ஒன்றிணைந்து செய்ய வேண்டும். அவர்களுக்கு கட்சி நிர்வாகிகள் முழு ஒத்துழைப்பு அளித்து, வேட்பாளர் வெற்றியை உறுதி செய்ய வேண்டும்' என, பழனிசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இடைத்தேர்தலில், அ.தி.மு.க..சார்பில் போட்டியிட விரும்புவோரிடம், 23ம் திகதி முதல் 26ம் திகதி வரை, விருப்ப மனுக்கள் பெறப்பட்டன.

விரைவில் வேட்பாளர் அறிவிப்பு வெளியாக உள்ளது. இது தொடர்பாக, ஈரோட்டில் கட்சியினருடன் பழனிசாமி ஆலோசனை நடத்தினார். அவரது அதிரடி நடவடிக்கையை தொடர்ந்து, பன்னீர்செல்வம் தரப்பும் தேர்தல் பணிகளை துவக்குவதற்கான ஆயத்த பணிகளை மேற்கொண்டு உள்ளது.

இரு தரப்பும் போட்டியிடுவதில் மும்முரமாக இருக்கும் நிலையில், கூட்டணிக் கட்சியான பா.ஜ., நிலைப்பாடு என்ன என்பது, அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

விரைவில் வேட்பாளர் அறிவிப்பு ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் விரைவில் அறிவிக்கப்படுவார் என, முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் தெரிவித்தார்.



பன்னீர்செல்வம் விருதுநகர் மாவட்டம் சிறிவில்லி புத்தூர் ஆண்டாள் கோவிலில், சுவாமி தரிசனம் செய்தார். பின், தன் குலதெய்வ கோவிலான செண்பகத்தோப்பு பேச்சி யம்மன் கோவிலில், மதியம் நடந்த சிறப்பு வழிபாட்டில் பங்கேற்றார். அங்கு அவர் செய்தியாளர்களிடம் பேசும் போது,

ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதி வேட்பாளர் விரைவில் அறிவிக்கப்படுவார் என்றார். ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் யாருக்கு ஆதரவு என்பதை அறிவிப்பதில், பா.ஜ., தாமதம் செய்வது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதேவேளை, தி.மு.க..கூட்டணியில், காங்கிரஸ் சார்பில் இளங்கோவன் போட்டியிடுகிறார். அவருக்கு கமல் தலைமையிலான மக்கள்நீதி மய்யம் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

அ.தி.மு.க..வில் பழனிசாமி, பன்னீர் செல்வம் ஆகிய இரு தரப்பினரும் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளனர். இரு தரப்பும் பா.ஜ.க..விடம் ஆதரவு கேட்டுள்ளன.

அ.தி.மு.க., இடைக்கால பொதுச்செயலர் பழனிசாமி தரப்புக்கு ஆதரவளிக்க, பா.ஜ.க., முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இதனை சூசகமாக, தமிழக பா.ஜ.க., தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார். ஆனாலும், முடிவை அறிவிப்பதில் பா.ஜ.க., தாமதம் செய்து வருவது, பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

இது தொடர்பாக, பா.ஜ.க., நிர்வாகிகள் கூறியதாவது: இடைத்தேர்தலில் த.மா.கா., வேட்பாளரை, தாமரை சின்னத் தில் போட்டியிட வைக்க, பா.ஜ.க., மேற்கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லை. இந்த இடைத்தேர்தலை, தங்கள் பலத்தை நிரூபிக்கும் களமாக பழனிசாமி நினைக்கிறார். போட்டியிடுவதில் உறுதியாக உள்ள அவர், அதற்கான வேலைகளை துவங்கி விட்டார். அதனால் தாமும் போட்டியிட வேண்டிய கட்டாயத்திற்கு பன்னீர்செல்வம் தள்ளப்பட்டுள்ளார். அ.தி.மு.க., பிளவுபட்டு இருந்தாலும் பழனிசாமி தரப்பிடம் தான் அதிக நிர்வாகிகள் உள்ளனர். எனவே, அவருக்கு ஆதரவளிக்கலாம் என, பா.ஜ.க., தலைவர்களில் ஒருபிரிவினர் கூறுகின்றனர்.

இரு தரப்பில் யாரை ஆதரித்தாலும், லோக்சபா தேர்தலில் சிக்கலை ஏற்படுத்தும் என, பா.ஜ.க., மேலிடம் நினைக்கிறது. அதனால், பா.ஜ.க..வை ஆதரித்து வரும் பன்னீர்செல்வத்தை சமாதானப் படுத்தும் முயற்சியில் அவர்கள்கள் ஈடுபட்டுள்ளனர். இதனால் தான் தாமதம். ஆனாலும், ஓரிரு நாளில் இடைத் தேர்தல் நிலைப்பாட்டை, அண்ணாமலை அறிவிப்பார். இவ்வாறு அவர்கள் கூறினார்.

# இஸ்லாமிய வெறுப்பினை எதிர்த்துப் போராடும் கனடாவின் முதல் சிறப்புப் பிரதிநிதியை அறிவித்த பிரதமர்!

மனித உரிமை வழக்கறிஞர் மற்றும் விருது பெற்ற பத்திரிகையாளர் அமைரா எல்காபி, தற்போது இஸ்லாமிய வெறுப்பை எதிர்த்துப் போராடுவதற்கான கனடாவின் முதல் சிறப்புப் பிரதிநிதியாக நியமிக்கப் பட்டுள்ளார். பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து அறிக்கை ஒன்று வெளியிடப் பட்டது. அதில், கனடா முழுவதிலும் உள்ள இஸ்லாமிய சமூகங்களுக்கு தங்கள் அரசு ஆதரவளிப்பதாகவும், இஸ்லாமிய வெறுப்பு, வெறுப்பை தூண்டும் வன்முறை மற்றும் அமைப்பு ரீதியான பாகுபாடுகள் எப்போது எங்கு நிகழ்ந்தாலும் அதனைக் கண்டிக்கவும், சமாளிக்கவும் நடவடிக்கை எடுப்பதற்கான உறுதிப்பாட்டை கனேடிய அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் இஸ்லாமிய வெறுப்பு, பாகுபாடு ஆகியவற்றை எந்த வடிவத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதது மற்றும் இந்த நாட்டில் இடமில்லை.



அமைரா கனடாவில் உள்ள இஸ்லாமியர்களின் மாறுபட்ட மற்றும் குறுக்குவெட்டு அடையாளங்கள் பற்றிய விழிப்புணர்வை அவர் ஊக்குவிப்பார். இஸ்லாமியர்களின் பிரதிபலிக்கும் உள்ளடக்கிய கொள்கைகள், சட்ட முன்மொழிவுகள், திட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை மேம்படுத்துவதில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவார்.

அவ்வாறு செய்வதன் மூலம் சமத்துவம், உள்ளடக்கம் மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றின் மரியாதையை மேம்படுத்தவும், நமது நாட்டின் தேசிய கட்டமைப்பிற்கு இஸ்லாமியர்களின் முக்கிய பங்களிப்புகளின் மீது வெளிச்சம் பிரகாசிக்கவும் அவர் உதவுவார்.

பன்முகத்தன்மை உண்மையிலேயே கனடாவின் மிகப் பெரிய பலங்களில் ஒன்றாகும். ஆனால் பல இஸ்லாமியர்களுக்கு ஐளடயஅழிழடியை மிகவும் பரிச்சயமானது. அதை நாம் மாற்ற வேண்டும். நம் நாட்டில் யாரும் தங்கள் நம்பிக்கையின் காரணமாக வெறுப்பை அனுபவிக்கக் கூடாது என தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையில், அனைவரும் பாதுகாப்பாகவும், மரியாதையாகவும் உணரும் ஒரு நாட்டை நாங்கள் தொடர்ந்து கட்டியெழுப்ப அவருடன் (அமைரா) இணைந்து பணியாற்ற ஆவலுடன் காத்திருக்கிறேன் என ட்ரூடோ கூறியுள்ளார்.

# இழுத்தடிக்கிறதா சீனா?



கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாக சீனாவின் எக்சிம் வங்கியிடம் இருந்து, சர்வதேச நாணய நிதியத்துக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் கொழும்புக்கு வந்திருந்த சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச திணைக்கள உதவித் தலைவர், விரைவில் உங்களுக்கு நல்ல செய்தி வரும் என்று கூறிச் சென்ற சில நாட்களிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

இலங்கைக்கு வழங்கிய கடனை மீளப் பெறுவதை, இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்க இணக்கம் தெரிவித்து, சீனாவின் எக்சிம் வங்கி கடிதம் அனுப்பியிருக்கிறது. இந்தக் கடிதம் அனுப்பப்பட்டு விட்டதாக தகவல்கள் வெளியானதும், இந்தியாவை அடுத்து சீனாவின் தரப்பில் இருந்தும் தடை அகன்று விட்டதாகவே பலரும் கருதினார்கள்.

சீனா இணங்கி விட்டதால், சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர்கள் நிதியுதவி விரைவில் வந்து விடும் என்று நம்பினார்கள். நிதி இராஜாங்க அமைச்சர் ஷெகான் சேமசிங்க, இதனை சீனாவின் சாதகமான சமிக்ஞை என்று கூறினாலும், முழுமையான ஒத்துழைப்பு என்பதை உறுதிப்படுத்தவில்லை.

அதாவது சீனாவின் உத்தரவாதக் கடிதம் அதுவல்ல என்று கூறியிருக்கிறார். பொருளாதார நிபுணரான பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவும், சீன எக்சிம் வங்கியின் இந்தக் கடிதம் சர்வதேச நாணய நிதியத்தின் தேவைகளை நிறைவேற்றப் போதுமானதாக இருக்குமா என்று சந்தேகம் வெளியிட்டிருக்கிறார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான பணியாளர் மட்ட உடன்பாடு ஏற்பட்டு, நான்கு மாதங்களா கியும், இலங்கையினால் அந்த உதவியைப் பெற முடியவில்லை.

காரணம் கடன் மறுசீரமைப்பு உத்தரவாதத்தை, கடன் வழங்குநர்களிடம் பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உள்ளது. இலங்கையின் கிட்டத்தட்ட 40 பில்லியன் டொலர்கள் வெளிநாட்டுக் கடன்களில், 20 சதவீதம் சீனாவிடம் இருந்து பெறப்பட்டிருக்கிறது. அதனிடம் பெறப்பட்ட இரு தரப்புக் கடன்கள் கிட்டத்தட்ட 8 பில்லியன் டொலர்களுக்கு சற்றுக் குறைவாகும். இதனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 20 வருட அவகாசத்தை தரும்படி, இலங்கை அரசாங்கம், சீனாவிடம் கோரிக்கை விடுத்திருந்தது. ஆனால், சீனாவின் எக்சிம் வங்கி அனுப்பியுள்ள கடிதத்தில், 2 வருடங்களுக்கு மாத்திரம் கடன் வசூலிப்பை ஒத்திவைப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது கோரப்பட்ட கால அவகாசத்தில் வெறும் 10 சதவீதம் மட்டும் தான். இந்த உத்தரவாதம் சர்வதேச நாணய நிதியத்தினதும், பாரிஸ் கிளப் நாடுகளினதும் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வதற்குப் போதுமானதாக இருக்குமா என்ற கேள்வி பரவலாக எழுப்பப்படுகிறது. சர்வதேச நாணய நிதியம் கடன் மறுசீர மைப்பு உத்தரவாதத்தை கோருவதற்கும், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை .லங்கை பெற்றுக் கொள்வதற்கும் முக்கியமான காரணங்கள் உள்ளன.

சர்வதேச நாணய நிதியம் இந்த கடன் மறு சீரமைப்பு இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளாமல் உதவியை வழங்கினால் இலங்கைக் கடனைத் திருப்பிச் செலுத்தும் இயலுமைக்கு வந்து விட்டதாகக் கருதப்படும்.

அது தனியே கடனை பெற்றுக் கொள்வதற்கு மாத்திரமன்றி, கடனை திரும்ப கேட்பதற்குமான சூழலை ஏற்படுத்தும். பொருளாதார நெருக்கடியில் இருந்து இப்போது தான் கொஞ்சம் கொஞ்சமாக தேறிவரும் இலங்கையினால் இப்போதைக்கு கடனை திருப்பிச் செலுத்தும் இயலுமையை அடைய முடியாது. அதனால் தான், சர்வதேச நாணய நிதியம் முதலில் கடன் வழங்குநர்களிடம், கடன் மறுசீரமைப்புக்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதித்தது. சீனாவின் எக்சிம் வங்கி, தான் வழங்கிய கடன்களை மீளப் பெறுவதற்கு இரண்டு வருட காலஅவகாசத்தை வழங்க .ணங்கியிருக்கிறது. இது சீனாவின் முழுமையான கடன் மறுசீரமைப்பு உத்தரவாதம் அல்ல.

இதற்குள் இரண்டு முக்கியமான சிக்கல்கள் இருக்கின்றன. ஒன்று சீனாவின் எக்சிம் வங்கியால் வழங்கப்பட்டிருக்கின்ற குறுகிய கால அவகாசம். இது இலங்கை தனது கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனை அடைவதற்குப் போதுமான காலஅவகாசமாக இருக்காது.

ஏனென்றால் இலங்கை கடந்த ஆண்டு பொருளாதார நிலையில் அடிமட்டத்தை அடைந்து விட்டது. வங்குரோத்து நிலையை அடைந்து விட்ட நாடு, அடுத்த இரண்டு ஆண்டுகளில் தனது வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் அளவுக்கு முன்னேற்றமடையும் என்று உறுதியாகக் கூற முடியாது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி தனியே நாட்டின் பொருளாதாரக் கொள்கை, மற்றும் மோசமான நிதி நிர்வகிப்பினால் மாத்திரம் ஏற்பட்டிருக்கவில்லை. கொரோனா தொற்று, உக்ரேன் போர் போன்ற உலகளாவிய நெருக்கடிகளும் அதில் காத்திரமான தாக்கத்தைச் செலுத்தின.

2018இல் சீனாவில் இருந்து, 265.965 சுற்றுலாப் பயணிகள் வந்த நிலையில், அடுத்த ஆண்டில் 5 இலட்சம், பேரைக்கொண்டு வர அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. ஆனால் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலினால், 2019இல் 167.863 சீன சுற்றுலாப் பயணிகளையே அழைத்து வர முடிந்தது.

அதற்குப் பின்னர் கொரோனா பரவலினால், அந்த எண்ணிக்கை, 2020இல் 26.147 ஆக குறைந்தது. 2021இல் வெறும், 2.417 பேரே வந்தனர். 2022 இல், சற்று அதிகரித்தாலும், 4.715 என்ற கோட்டை அது தாண்டவில்லை. சுற்றுலா வருமானம் தற்போது உயரத் தொடங்கியிருந்தாலும், சீன சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு கொரோனா தொடர்ந்து தடையாகவே இருந்து கொண்டிருக்கிறது.


அதுபோல, உக்ரேன் போரும், ரஷ்ய, உக்ரேன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை கணிசமான வளர்ச்சியை எட்டத் தடையாக இருக்கிறது. போர் மற்றும் நோய்த்தொற்று போன்ற எதிர்பாராத எந்த விடயங்களும், இலங்கையின் பொருளாதார மீட்சியில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதற்கு இது உதாரணம். இரண்டு ஆண்டுகளுக்குள் இலங்கை கடனை மீளச் செலுத்தும் திறனை அடைந்து விடும் என்று சீன எக்சிம் வங்கி சிந்தித்துப் பார்க்கவில்லை.

அது வெறுமனே சர்வதேச நாணய நிதியத் துக்கு ஒப்பனைக்காக கடிதம் கொடுப்பதில் கவனம் செலுத்தியதே தவிர, இலங்கையின் பொருளாதார நிலையை கவனத்தில் கொண்டிருக்கவில்லை. அவ்வாறு சிந்தித்திருந்தால், நீண்டகால கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு இணங்கியிருக்க முடியும். இரண்டாவதாக சீனாவின் தரப்பில் இன்னொரு சிக்கல் இருக்கிறது. சீனாவின் முழுமையான கடன் மறுசீரமைப்பு உத்தரவாதம் வழங்கப்படவில்லை. சீனா தனது இரண்டு வங்கிகளின் ஊடாக இலங்கைக்கு கடன்களை வழங்கியிருக்கிறது. ஒன்று சீன எக்சிம் வங்கி. இது, இலங்கைக்கு 4.3 பில்லியன் டொலரர்கள் இரு தரப்புக் கடனை வழங்கியிருக்கிறது. இரண்டு, சீன அபிவிருத்தி வங்கி இதன் மூலம் இலங்கைக்கு 3 பில்லியன் டொலர்கள் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இது தவிர 2021ஆம் ஆண்டு சீன மக்கள் வங்கி இலங்கை மத்திய வங்கிக்கு நாணய மாற்று கடனாக 1.5 பில்லியன் டொலர்களை வழங்கியிருக்கிறது. இதனை மூன்று ஆண்டுகளில் மீளச் செலுத்த வேண்டும்.


அதில் பாதிக்காலம் ஏற்கனவே முடிந்து விட்டது. இந்த மூன்று கடன்களையும் சேர்த்தால் .லங்கையின் மொத்த வெளி நாட்டுக் கடன்களில் 22 சதவீதம் சீனாவுக்கு செலுத்தப்பட வேண்டியது.

அதில், பாதிக்கடனை வழங்கிய சீன எக்சிம் வங்கி மட்டும் தான், இரண்டு வருட கடன் ஒத்திவைப்பு உத்தர வாதத்தை அளித்திருக்கிறது. எஞ்சிய இரண்டு சீன வங்கிகளிடம் .ருந்தும் அவ்வாறான உத்தரவாதம் ஏதும் வழங்கப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை.


எனவே, சீன எக்சிம் வங்கியின் இரண்டு வருட கடன் ஒத்தி வைப்பு உத்தரவாதக் கடிதத்தை வைத்துக் கொண்டு இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் உதவியை வழங்க .ணங்குமா என்பது சந்தேகம் தான். கடந்த சில வாரங்களில் காணப்பட்ட தேக்க நிலை தற்போது குறைந்திருக்கிறது. இது நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான நம்பிக்கை உருவாகியிருக்கிறதே தவிர, நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வழி பிறந்து விட்டது என்று முழுமையாக நம்ப முடியாத நிலையே தற்போது வரை நீடிக்கிறது



சிவமயம்
ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும். நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். எதிர்ப்புகள் விலகும். காரிய தடைகள் நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் வேகம் பிடிக்கும். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் மும்முரமாக ஈடுபடுவீர்கள். வேலை பளு இருந்தாலும் எல்லா பணிகளையும் திறம்பட செய்து முடிப்பார்கள்.




ரிஷபராசி அன்பர்களே! எடுக்கும் காரியங்கள் வெற்றியை தரும். பணவரத்து வழக்கத்தை விட அதிகரிக்கும். ஆனால் செலவும் அதற்கு ஏற்றார்போல் இருக்கும். அனுபவபூர்வமான அறிவு திறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்பாக இருக்கும். பேச்சாற்றலால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இழுப்பீர்கள். பங்கு மார்க்கெட் லாபம் ஓரளவு கூடும். உத்யோகத்தில் பதவி உயர்வு அல்லது புதிய பொறுப்புகள் வந்து சேரும்.





மிதுனராசி அன்பர்ககளே! கொடுத்த வாக்கை காப்பாற்ற மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். எனவே யாருக்கும் எந்த வாக்குறுதியையும் அளிக்காமல் இருப்பது நல்லது. அடுத்தவருக்கு செய்யும் உதவிகள் சில நேரத்தில் உங்களுக்கு எதிராகவே மாறலாம் கவனமாக செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரம் மந்தமாக இருந்தாலும் பழைய பாக்கிகள் வசூலாவது ஆறுதலை தரும். மிகவும் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது.





கடகராசி அன்பர்களே! எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். அடுத்தவர்களுக்காக உதவிகள் செய்வதில் உற்சாகம் உண்டாகும். தொழில், வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். எழுத்து தொழிலில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். தொழில், வியாபாரத்தில் பணியாட்கள் மூலம் நன்மை உண்டாகும். மேலதிகாரிகளின்பாராட்டடைப் பெறுவீர்கள்




சிம்மராசி அன்பர்களே! வீண் பேச்சை குறைத்துக் கொண்டு செயலில் ஈடுபடுவது வெற்றியை தரும். உங்களை சுற்றி வருபவர்களால் செலவு உண்டாகும் . திடீர் கோபம் ஏற்பட்டு அதனால் அடுத்தவர்களிடம் சண்டை உண்டாக நேரலாம். எனவே மிகவும் நிதானமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களை மற்றவர்களிடம் கூறி ஆலோசனை கேட்பதைத் தவிர்க்கவும்.




கன்னிராசி அன்பர்களே! கவனமாக இருக்க வேண்டியது அவசியம். வாகனங்களில் செல்லும் போதும், பணிபுரியும் இடத்தில் ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்கு வர தாமதம் ஆகலாம். அலைச்சல் வேலை பளுவை சந்திக்க நேரிடும்.





துலாம்ராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்திலும் லாபம் உண்டாகும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். எதை விரும்பினாலும் அது கிடைக்க வழி தெரியும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். எதிர்பார்த்த ஆர்டர்கள் கிடைக்கும். தொழில் விரிவாக்கம் செய்யும் எண்ணம் மேலோங்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்த்த பணம் கிடைக்க பெறுவார்கள். மேலதிகாரிகளின் ஆதரவும் இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! ஆக்கபூர்வமான யோசனைகள் உண்டாகும். மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்வதன் மூலம் கூடுதல் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். தொழிலை விரிவுபடுத்த ஆலோசனைகளை மேற்கொள்வீர்கள். உத்யோகத்தில் செயல்திறமை வெளிப்படும்.








தனுசுராசி அன்பர்களே! எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். சொத்துக்களை வாங்கும்போதும். விற்கும் போதும் கவனமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடக்கும். எதிர்பார்த்த லாபம் இருந்தாலும் தொழில் தொடர்பான செலவும் கூடும். உத்யோகத்தில் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். சனிபகவானை வழிபாடு செய்யவும்.




மகரராசி அன்பர்களே! எதிர்பாராத செலவுகள் வந்து சேரும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசுவது போன்றவற்றை செய்யும் போது கவனம் தேவை. இல்லையெனில் வீணான அவசொல் வாங்க நேரிடும்.தொழில் வியாபாரம் வழக்கம் போல் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களிடம் கவனமாக பேசி பழகுவது நல்லது.




கும்பராசி அன்பர்களே! விருப்பத்திற்கு மாறாக எதுவும் நடக்கும். எதிர்ப்புகள் அகலும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். பயணங்கள் சாதகமான பலன் தரலாம். தொழில் வியாபாரத்தில் வசூலாக வேண்டிய கடன் பாக்கிகள் வசூலாகும். வியாபாரத்தில் மன நிறைவு காண்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலைச்சலுக்கு பிறகு கடினமான காரியம் கூட கைகூடும்.




மீனராசி அன்பர்களே! எதையும் ஒரு முறைக்கு பலமுறை ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டியது அவசியம். காரியங்களில் தடைதாமதம் உண்டாகலாம். முயற்சிகளில் உடனடியாக பலன் காண்பது அரிது. வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. சகோதரர்கள் வழியில் ஏதேனும் பிரச்சனை வரலாம். தொழில் வியாபாரம் செய்பவர்கள் குறைவான லாபம் வரக் காண்பர்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# நாடு கடந்த அரசாங்கம்:-

(17ம் பக்கத் தொடர்ச்சி) அதாவது இந்தியாவின் எல்லையை புரிந்து கொள்ளாமல் இந்தியாவிடம் செல்வதில் பயனில்லை. அதே வேளை இந்த விடயத்தில் இந்தியாவை மீறி வேறு எவராலும் ஈழத் தமிழர்களுக்கு உதவவும் முடியாது. உதவினால் இந்தியாதான் உதவ முடியும் ஆனால் இந்தியா அதனால் உதவக் கூடிய எல்லையை தெளிவாக குறிப்பிட்ட பின்னர் அதற்கப்பால் சிந்தித்துக் கொண்டிருப்பதில் பொருளில்லை. ஒரு வேளை எதிர்காலத்தில் மாற்றங்கள் ஏற்படலாம் ஆனால் அதுவரையில் அரசியல் அசைவற்ற நிலையில் இருக்க முடியுமா?

இந்தியாவுடன் ஊடாடுவது தொடர்பில் நாடுகடந்த அரசாங்கம் தெளிவான நிலைப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம். நான் மேலே குறிப்பிட்டது போன்று நாடு கடந்த அரசாங்கத்தினை அரசியல்ரீதியில் மறுசீரமைப்புச் செய்தால் தான் அது சாத்தியப்படும். தவிர நாடு கடந்த அரசாங்கம் மத்திய அரசு பி.ஜே.பி ஆர்.எஸ்.எஸ் போன்ற அமைப்புக்களை எதிர்ப்பதை ஒரு அரசியல் நிகழ்ச்சி நிரலாகக் கொண்டிருக்கும் தமிழ் நாட்டு குழுக்களிலிருந்தும் அமைப்புக்களிலிருந்தும் முற்றிலும் வெளியில் வரவேண்டும்.

பி.ஜே.பி ஆர்.எஸ்.எஸ் விவகாரங்கள் முற்றிலும் உள்நாட்டு விவகாரங்களாகும். அது தொடர்பில் எந்தவொரு நிலைப்பாடும் ஈழத் தமிழர்களுக்கு இருக்கக் கூடாது. அவர்களுடன் உறவுகளை பேணிக் கொள்ள முடிந்தால் நல்லது. ஒரு வேளை முடியாவிட்டால் அமைதியாக இருக்கலாம்.

தமிழ் நாட்டிலுள்ள அரச எதிர்ப்பு குழுக்களுடன் தொடர்புகளை பேணிக் கொள்வது அடிப்படையிலேயே தவறானது மற்றும் ஆபத்தானது. இன்றைய அரசியல் ஒழுங்கு புரட்சிகர வாதங்களுக்கானதல்ல. அதற்கு ஒரு காலமிருந்தது. இன்றைய உலக அரசியல் ஒழுங்கென்பது அடிப்படையிலேயே பலம் பொருந்திய நாடுகளின் நலன்களுக்கான உலக ஒழுங்காகும். ஒவ்வொரு நாடும் அதன் நீண்டகால நலன்களை கருத்தில் கொண்டு தான் ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களுக்குள் தலையிடு செய்கின்றது.

இதில் சரி பிழை நீதி அநீதி என்னும் சொற்களுக்கு எவ்வித பெறுமதியும் இல்லை. தந்திரம் தெரிந்தவர்கள் தப்பித்துக் கொள்ள முடியுமென்பது தான் இந்த ஆட்டத்திற்கான விதியாகும். இதனை புரிந்து கொண்டு தான் நாம் செயற்பட வேண்டும்.

புலம்பெயர் சமூகங்கள் தேசக் கட்டுமானங்களில் வரலாற்று ரீதியான பங்களிப்புக்களை வழங்கியிருக்கின்றது. குறிப்பாக இஸ்ரேல் ஐரிஸ் ஆர்மேனியா ஸ்லேவேனியா குரோஸியா போன்ற தேசங்களின் கட்டுமானங்களில் புலம் பெயர் சமூகம் வரலாற்று ரீதியான பங்களிப்பை வழங்கியிருக்கின்றது.

இந்த பின்புலத்தில் நோக்கினால் ஈழத் தமிழ் புலம்பெயர் சமூகம் தாயகத்தின் கட்டுமானங்களில் பெரியளவில் பங்களிக்க முடியும். புலம்பெயர் சமூகம் ஈழத் தமிழர்களுக்கான பலமென்பதில் இரு வேறுகருத்தில்லை. ஆனால் அது சரியாக கையாளப்படா விட்டால் அனைத்து முயற்சிகளும் வீணாகி விடும். கடந்த பதின்மூன்று வருடகால புலம் பெயர் நகர்வுகள் சுயவிமர்சனத்திற்கும் மறுசீரமைப்பிற்கும் உள்ளாக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் புதிய போக்குகளுக்கு புலம்பெயர் சமூகத்தினால் ஈடுகொடுக்க முடியாமல் போய் விடும்.

# ஒளிவிடும் 25வது ஆண்டில்



மலர்வு 07.06.1932

உதிர்வு 11.02.1998

## அமரர் உயர்திரு குட்டித்தம்பி சண்முகலிங்கம்

### திதி:- 05 பெப்ரவரி 2023

அன்புள்ள அப்பா!
நீங்கள் மறைந்து போனாலும்
மறையாமல் இருக்கிறது
உங்களின் பாசமும் அன்பும்
வானில் இருக்கும் உங்களிடம்
வேண்டுகின்றோம் வாழ்த்துக்கள்
உங்களின் நினைவுப் பாதையில்
எங்களின் கண்ணீர் மலர்கள்
என்றும் உங்கள் நினைவுகளுடன்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.


## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







இந்த இடத்தில்
விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600







